பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 04 புதன்கிழமை (19.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 355

# அரசியல் தீர்வுக்கு ஒத்துழையுங்கள்; எதிர்க்கட்சிகளுக்கு அரசு அழைப்பு!

## இணைந்து செயற்பட்டாலே சாத்தியம் என்கிறார் அமைச்சர் றோஹித



கொழும்பு, நவம்பர் 19

தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இது விடயத்தில் சகல தரப்புகளும் அரசுடன் இணைந்து உள சுத்தியுடன் செயற்படுவதன் மூலமே உண்மையான அரசியல் தீர்வு -சமரச முயற்சி - சாத்தியப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம நேற்று நாடாளுமன் றத்தில் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் போர் நிறுத்தத்துக்கு இப்போது வாய்ப்பில்லை என்கிறார் ரணில்

### கூட்டமைப்பையும் பேச்சில் இணைக்க வலியுறுத்து

புதுடில்லி, நவ. 18

இலங்கையில் இப்போது போர் நிறுத்தத்துக்கு வாய்ப் பில்லை- என்று இலங்கை யின் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, இங்கு செய்தியாளர்களிடம் பேசுகை யில் தெரி வித்தார்.

ஆனால் அவர் அதற்கான காரணம் குறித்து விரிவாக எதுவும் கூறவில்லை.

இதே வேளை-

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகவே தீர்வு காணப்படவேண்டும். அதற்கான முயற்சியில் தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.



கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவுக்கு விஜயம் செய்த நிலையில், மூன்று நாள்கள் பய ணமாக கடந்த திங்கட்கிழமை புதுடில்லி (16 ஆம் பக்கம் பார்க்க)

## உடுத்துறை, வத்திராயன் பகுதிகளில் அகதி முகாம்கள் மீது ஷெல் வீச்சு!

வவுனியா, நவ. 19

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சி கிழக்கு உடுத்துறை, வத்திராயன், கட்டைக்காடு மற்றும் வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள இடம் பெயர்ந்த மக்களின் குடியிருப்புகள் மீது நேற்றுமுன்தினம் மதியம் இராணுவத்தினர் தொடர்ச்சியான ஷெல் தாக்கு தலை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணிமுதல் மாலை 6.40 மணிவரை தொடர்ச்சியாக சுமார் 100 ஆட்லறி ஷெல் கள் அப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதலி னால் இடம்பெயர்ந்து வாழும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியிலும் முகமாலையிலும் நேற்று 24 மணிநேரம் தொடர் சண்டை

கொழும்பு, நவ.19

கிளாலி, முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் 24 மணி நேரமாகத் தொடர்ந்து மோதல் இடம்பெறுவதாக இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

இராணுவத் தரப்பு நேற்று மாலை விடுத்த அறிக்கை யில், விடுதலைப் புலிகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நாயாறு கறுப்புமுனைக் கடலில் புலிகள் - கடற்படையினர் கடும் சமர்

வவுனியா, நவ. 19

முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் கறுப்புமுனைப் பகுதியில் நேற்றுக் காலை 6.15 முதல் 45 நிமிடங்கள் கடற் படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் கடும் சமர் நடைபெற்றுள்ளது.

இந்த மோதல் குறித்து விடுதலைப்புலிகள் தெரிவித் துள்ளமை வருமாறு:- (16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு

மன்னார், நவ:19

மன்னார் தோட்டவெளிப் பகுதியில் நேற்றுக் காலை கடற்படையினர் திடீர் சுற்றி வளைப்புத் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலை வேளையில், குறித்த பிரதேசத்தைச் சுற்றி வளைத்துத் தேடுதல் மேற்கொண்ட கடற்படையினர் வீட்டில் இருந்தவர்களில் ஒவ்வொருவரைத் தவிர ஏனைய அனைவரையும் தோட்டவெளி புனித வேதசாட்சிகள் ஆல யத்திற்குச் செல்லுமாறு (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கைதிகள் திடீர் இடமாற்றம்!

கொழும்பு, நவ.19

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து நேற்றுமாலை 5 மணியளவில் திடீரென 74 தமிழ் அரசியல் கைதிகள் மகஸின் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர் எனத் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி மோதல்களின்போது 1 நாளில் மட்டும் 8 அதிகாரிகள் உட்பட 54 படையினர் பலி!

### மங்கள சமரவீர வெளியிடும் தகவல் இது

கொழும்பு, நவ.19

பூநகரிப்பகுதியில் விடுதலைப்புலி களுக்கும் படையினருக்கும் இடையில் கடந்த வாரம் நடைபெற்ற மோதல்களில் ஒரு நாள் மட்டும் 8 அதிகாரிகள் உட்பட 54 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; 350 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தகவல்களை ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர வெளியிட்டுள்ளார்.

இந்த மோதல் குறித்து மேலும் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பூநகரியை கைப்பற்றும் படையினரின் நகர்வுக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை நடத்தினர்.

இதில் படையினர் பலத்த இழப்புக்களை சந்தித்தனர்.

பூநகரி பகுதியில் கடைசி ஒருநாள் நடைபெற்ற மோதல்களில் மட்டும் எட்டு அதிகாரிகள் உட்பட 54 படையினர் கொல்லப்பட்டனர். 350 படையினர் காய மடைந்தனர் - என்று மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (அ-1)

## வவுணதீவு வைத்தியர் கொலை: சந்தேகத்தில் நால்வர் கைது

கொழும்பு, நவ.19

வவுணதீவு வைத்தியசாலை வைத்தியர் பாலித பத்மகுமார மற்றும் பொதுமகன் ஒருவரின் படுகொலைகளுடன் தொடர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியில் கிளைமோர் தந்தை, மகன் உட்பட மூவர் பலி!

கொழும்பு, நவ.19

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள புளியங்குளம் - நெடுங்கேணி பிரதான வீதியில் சன்னாசிப்பரந்தன் என்ற இடத் தில் வைத்து நேற்றுக்காலை 8.45 மணியள வில் அரச படைகளின் ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன் உட்பட மூவர் பலியாகின... மேலும் இரு வர் படுகாயமடைந்தனர் .

வவுனியாவில் இருந்து வன்னிக்குச் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா இலங்கைக்கு ஆயுத உதவி வழங்குவதைத் தடுக்கக்கோரி வழக்கு

### சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

சென்னை, நவ.19

இலங்கை இராணுவத்துக்கு, இந்திய மத்திய அரசு ஆயுத உதவி செய்வதற்கும், இராணுவப் பயிற்சி அளிப்பதற்கும் தடை விதிக்க வேண்டுமென்றுகோரி சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம், ராணிபேட்டையைச் சேர்ந்த எஸ்.மோகனசுகுமார் என்பவரே பொதுநலன் கருதி சென்னை உயர்நீதிமன்றத் தில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரியநேத்திரன் எம்.பியிடமும் சி.ஐ.டியினர் நேற்று விசாரணை

கொழும்பு, நவ19

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பி னர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் குற் றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு நாலரை மணி நேரம் விசாரணை செய்யப்பட்டார்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு சி.ஐ. டியினரின் நான்காம் மாடிக்கு அழைக்கப் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருவாவடுதுறை ஆதீன நாவலர் விழாவில் யாழ்.சைவ பரிபாலன சபைக்கு விருது

## நாளைய விழாவில் கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ, 19

திருவாவடுதுறை ஆதீனத்தில் நாளை வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் விழாவில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு ''சித்தாந்தச் சைவச் சுடர் நிலையம்'' என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.


1888ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சைவபரிபாலன சபை 120 ஆண்டுகளைக் கடந்தும் சித்தாந்த சைவப் பணியாற்றி வருவதைக் கௌரவித்து இந்த விருது வழங்கப்படுகிறது.

அத்துடன் சபைக்கு இந்திய நாணயத்தில் 3,000 ரூபா பொற்கிழியும் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு ''ஈழத் திருநாட்டில் சைவசமய வளர்ச்சி'' என்ற தலைப்பில் யாழ்.சைவபரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப் புரவலர் த.சண்முகலிங்கம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

அவர் பொன்னாடை போர்த்தி, உருத்திராக்க மாலை அணிவித்துக் கௌரவிக் கப்படவுள்ளார். (அ-01)


## வட்டுக்கோட்டையில் புதிய ஓர் ஆரம்பம்
## SUBRA(14) கிளை நிறுவனம்




23.11.2008 காலை 9.30 மணி சுபவேளையில் குதூகல ஆரம்பம்
புலமைப் பரிசில் -கைலைநாதன்
தரம் -1 முதல் O/L வரை தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்
07.12.2008 காலை 10 மணி


## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின்
ஆசிரியர் செல்வராசா சுரேஸ்
அவர்களின் அன்புச் சகோதரன்

### அமரர் செல்வராசா சதீஸ்

*(சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்)*

அவர்களின் திடீர் மறைவினால் துன்பத்தில் துவண்டுபோய் இருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி. — ஆசிரிய சகோதரத்துவமும் கல்வி சார ஊழியர்களும்.

(சி-555374)

## கண்ணீர் அஞ்சலி

2007'ஏ' பிரிவு தாதிய மாணவி செல்வி கீதா சின்னையாவ
அவர்களின் அன்புத் தந்தை

### கந்தன் சின்னையா

அவர்களது மறைவிற்காக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியக் கல்லூரிச் சங்கம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலயம் மனைப்பொருளியல் ஆசிரியை
கனகலிங்கம் புஸ்பராணி அவர்களின் அன்புத் தந்தை

### வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

அவர்களின் மறைவையிட்டு மிக மனவேதனை அடைவதுடன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைப் பொருளியல் மன்றம்,
வலிகாமம் கல்வி வலயம்.

(79967)

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா ஸ்ரீஸ்கந்தராசா

யாழ்.பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா ஸ்ரீஸ்கந்தராசா கொழும்பில் நேற்று (18.11.2008) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*85, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (79975)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சண்முகசுந்தரம் (மைத்துனர்).

# ஆரியபாஷாபிருத்திசங்க பட்டமளிப்பு இன்று

யாழ்ப்பாணம், நவ.19

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பட்டமளிப்பும் பாராட்டு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறை வீதியில் உள்ள கீழைத்தேய கல்விக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசாவும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் பண்டிதர் க.நாகலிங்கம், புலவர் வை.க.சிற்றம்பலம் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (1)

# யாழ்.குடும்பஸ்தர் புத்தளத்தில் கடத்தல்

வலி.வடக்கு, நவ.19

புத்தளத்தில் ரத்மலாய என்னும் இடத்தில் உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் பொலிஸ் சீருடையில் வந்தவர்களினால் கடத்திச் செல்லப்பட் டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியைச் சேர்ந்த நாகப்பன் அழகர்சுவாமி (வயது45) என்பவரே கடத்திச் செல்லப்பட்டவராவார்.

இது தொடர்பாக அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

(50-86-25)

# கோப்பாயில் நாளை நாவலர் குருபூசை

கோப்பாய், நவ, 19

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய நாவலர் குரு பூசை நாளை வியாழக்கிழமை காலை பாடசாலை அதிபர் திருமதி சா.வாகீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் மாணவர்களின் பேச்சு, கலை நிகழ்வுகளுடன் ''சைவத்தின் காவலர்'' என்ற தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (1-72)

# காரைநகர் சங்கத்தின் கிளையில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.19

காரைநகர் பல.நோக்குக் கூட்டுறவுச்சங்க கிளை இரவு வேளை உடைக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

காரைநகர் ப.நோ.கூ.சங்கத்தின் காரைநகர் ஆலடியில் உள்ள விற்பனை நிலையமே கடந்த வியாழக்கிழமை இரவு உடைக்கப்பட்டு சுமார் 40ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா வகை, சவர்க்காரம் உள்ளிட்ட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுத் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-250)

# இன்றைய ஆட்டம்

வண்ணை, நவ, 19

யாழ்.உதைப்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் 11பேர் கொண்ட அணிகள் பங்குபற்றும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதும். (50-86-160)

## தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு (NPMB 8679) 14.11.2008 அன்று நல்லூருக்கும் ஆணைப்பந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரி.விவேகானந்தன் 137, செம்மணி வீதி, நல்லூர் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.


## பிரத்தியேக வகுப்பு ஆங்கிலம்

மாணவர்கள், அலுவலர்கள் ஆகிய ஆண், பெண் இருபாலாருக்கும் ஆங்கில இலக்கணம் மற்றும் கதைக்க, வாசிக்க மருதனார்மடத்தில் வகுப்புக்கள் எடுக்கப்படும்.
0602214571, 0774614387


# மரண அறிவித்தல்கள்

## சபாபதி கந்தையா

*(முன்னாள் தலைவர், பெருங்குளம் பிள்ளையார் கோயில்)*



கல்வயலைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட ச.கந்தையா (17.11.2008) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - சிவகாமிப்பிள்ளையின் மகனும் யோகாம்பிகை, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் தர்மலிங்கம், அம்பிகைபாகன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (18.11.2008) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அவிறித்ததலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வங்களா றோட்,
வாகையடி, மீசாலை. (சி-555375)

தகவல்:
க.தர்மலிங்கம் (முருகன்).

## திருமதி சந்திரவதனி முருகவேள்

BA (Hons DIP in Edu)

(ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.)



விக்னேஸ்வரா வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட சந்திரவதனி முருகவேள் 15.11.2008 அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் கதிரவேலு முருகவேளின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குட்டி- இலட்சுமி தம்பதியரின் இளைய மகளும் வல்வெட்டியைச் சேர்ந்த காலஞ் சென்ற கதிரவேலு (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் திருஞானம், மகாதேவன், ஜெகநாதன் (அதிபர், யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), காலஞ்சென்ற ஜெகதீசன் (அதிபர், யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்), பாக்கியநாதன் (ஜேர்மனி), கிருபன் (யா/ சிவப்பிரகாச ம.வி), இரம்பாதேவி, மோகனலீலா, லகாயினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மைதிலி, அபிராமி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (19.11.2008) புதன்கிழமை முற்பகல்10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விக்னேஸ்வரா வீதி ,*
*சங்கானை.*
*தொ.பே: 0602216479* (சி-555376)

தகவல்:
கதிரவேலு முருகவேள் (கணவர்).

## கதிர்காமு தெய்வரத்தினம்

காங்கேசன்துறை, வேவரியைப் பிறப்பிடமாகவும் அல்வாய், கொக்கட்டியாவளவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு தெய்வரத்தினம் நேற்று(18.11.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - அம்மணி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற முருகன் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் திருமதி செல்வேந்திரா சசிகலா(கனடா), ரமேஸ்காந் (கரன் - யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் HNDA), பகீரதன்(ரத்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா செல்வேந்திராவின் மாமனாரும் வைஷியா, சங்கீத் ஆகியோரின் பேரனும் முருகப்பெருமான், மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவமலர் பரராஜசுந்தரம், மகேசன்(கனடா), தவராசா (கனடா), காலஞ்சென்ற கணேசன், சற்குணராசா (ஜேர்மனி), லலிதாமலர், யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(18.11.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அல்வாய், பங்குவேம்படி மயானத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்வாய்.* (சி-555377) (வி.ஏ)

தகவல்:
தெ.ரமேஷ்காந்(மகன்).

## திருமதி சரஸ்வதி பாஸ்கரன்

நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் இராச வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பாஸ்கரன் நேற்று (18.11.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - பூமணி தம்பதியினரின் அன்பு மருமகளும், காமாட்சியம்மா, தங்கம்மா, ருக்குமணி, துரைராசா, உத்தமிப்பிள்ளை, தவபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விஜயகுமார், ராஜ்குமார், வினோதினி ஆகியோரின் தாயாரும், சர்மிளா, உஷாலினி, பிரேமதாஸ் (சிறி) ஆகியோரின் மாமியாரும், கஜன், திருவேரகன், தனுஜன், மதுசாயினி, பவிசாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.11.2008) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(இராமசாமி வைத்தியர் சந்தி அருகில்),*
*இராச வீதி,*
*கல்வியங்காடு.* (79974)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# போர்நிறுத்தத்துக்கு மறுப்பு ஏன்?

2009ஆம் நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாசிப்புக் கடந்த வாரம் நாடாளு மன்றத்தில் நிறைவேறிவிட்டது. 42 மேலதிக வாக்குகளால் நாட்டின் உத்தேச - வரவு செலவுகள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக வரவு செலவுத் திட்டத்தின் மீதான இறுதிக்கட்ட வாக்கெடுப்பு அடுத்த மாதம் எட்டாம் திகதி நடைபெற நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதுவும் அநேகமாக அரசுப் பக்கத்துக்குச் சார்பாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட கையோடு, சிறு இடைவெளியில் தேர்தல் நடைபெறலாம் என்ற பேச்சு அடிபடத் தொடங்கிவிட்டது. தேர்தல், நாடாளுமன்றத்துக்கா அல்லது மாகாண சபைகளுக்கா என்பதில் நிலைமை தெளிவாகவில்லை. ஊகங்கள் வெவ்வேறு விதமாக வெளிவந்தாலும் நாடா ளுமன்றத் தேர்தலே நடைபெறும் என்று மிகப் பலரும் கருதுகிறார்கள்.

பிறரின் தயவின்றித் தமது ஆளுங்கட்சிக்கு தனித்து அதிகப் பெரும்பான்மையைப் பெற்று, ஆட்சி நடத்தவேண்டும் என்பதே ஜனாதிபதியின் விருப்பம். அப்போதுதான், தமது பதவிக்காலத்தையும் அடுத்த தவணைக்கும் நீட்ட வாய்ப்பு வரும் என்பது அவரது உள்ளார்ந்த திட்டம் என்று அரசியல் அவதானிகள் எதிர்வு கூற ஆரம்பித்துவிட்டார்கள்.

போரின் வெற்றி அதற்கு உதவும் என்ற நோக்குடனேயே, தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் தீவிர மாக்கப்பட்டன என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. அதன் பொருட்டே எப்போதும் இல்லா தவாறு பாதுகாப்புக்கான உத்தேச செலவுக்கு 17,706 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது என்பது வெள்ளிடைமலை. எப்போதோ தெரிந்த விடயம்.

பாதுகாப்புச் செலவினத்தை அதிகரிக்கும்போது, அந்தச் சுமை பொதுமக்களின் தலைமீதே விழுகிறது; விழும். எனினும் தமிழர்களை ஒடுக்குவது என்ற இனவாதக் காற்றைச் சிங்கள மக்களைச் சுவாசிக்கச் செய்ததன் மூலம், தம்மீது விழும் வாழ்க்கைச் செலவுப் பளுவை அவர்களை மறக்கச் செய்து தமது ஆட்சியை நீட்டுவதற்கு அரசாங்கம் வழிசமைத்திருக்கிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் -

மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து, ஜனாதிபதி தமது செலவுக்கு ஒதுக்கி உள்ளார் என்று ஜே.வி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டி உள்ளார். வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோது காமினி ரத்னாயக்கா எம்.பி. இதனைப் புட்டுக்காட்டியிருக்கிறார்.

ஜனாதிபதியின் கைக்குச் செல்லும் இந்தப் பணத்தில் ஒரு பகுதி பாதுகாப்புச் செலவுக்கு - போரைத் தொடரும் தேவைகளுக்கு - போய்ச் சேரும் என்று நிச்சயமாக நம்பலாம். எந்தளவு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டும், மக்கள் மீது எத்துணை அதிக பளுவைச் சுமத்தியும், போரை வென்றுவிட வேண்டும் என்பது அரசின் இலக்காக உள்ளது என்பதனை இந்த விவகாரம் தொட்டுக்காட்டுகிறது.

போரில் வெற்றி பெறுவது என்ற மயக்க மருந்தைப் பெரும்பான்மை மக்கள் மீது தெளித்து தமது எண்ணத்தை நிறைவேற்றினால், தொடர்ந்து ஆட்சிக் கட்டிலில் இருந்து எந்தவகைச் சர்வாதிகாரத்திலும் ஈடுபடமுடியும். மக்கள் தட்டிக் கேட்க வலுவற்றுச் சாய்ந்து போவார்கள் என்ற திட்டமும் இதில் அடக்கம்.

போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்க விருப்பமில்லாது, ஜனாதிபதியும் அமைச்சர்களும் பலவகையான வெவ்வேறு வியாக்கியானங்களைத் தமது வாய்க்கு வந்தது போன்று கூறி வருவதன் பின்புலச் சிந்தனை, இடையில் - உரிய காலத்துக்கு முந்திய - ஒரு பொதுத் தேர்தலை நடத்தித் தமது ஆளுங்காலத்தை நீடித்து பதவிகளை நிரந்தரமாகத் தக்கவைத்து மக்கள் பணத்தினைச் சுரண்டுவதுதான் என்பதனை இப்போது புரிந்து கொள்ளும் நிலையில் சிங்கள மக்கள் இல்லை. அந்த அளவுக்கு அவர்களை இனவா தத்தால் திட்டமிட்டு, மயக்கிச் செயற்படுகிறது இந்த அரசும் அதன் தலைமையும்.

போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஒப்புக்கொண்டால், அதிகாரத்தில் தொடர்ந்து இருக்கும் வாய்ப்புப் பறிபோகலாம் என்ற அச்சம் அரசுக்கு. அதுவே ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்றபோது போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று செருக்குடன் உரத்துக் கூறியதன் தாற்பரியம்.

இந்தியாவும் ஏனைய நாடுகளும், இலங்கை அரசின் சரியான உள்ளக் கிடக்கையைப் புரிந்துகொள்ளக் காலம் செல்லலாம். உண்மையைப் பின்னர் அறிந்துகொள்ளக் காத்திருக்காமல், இப்போதே இதனைக் கவனத்தில் கொள்வது நல்லது.

போர் நிறுத்தத்திற்கு இலங்கை அரசு மறுத்து வருவதன் உள்ளார்ந்த சூக்குமம் என்ன என்பதனைக் கண்டறியும் தன்மை, ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகளுக்கு எப்போது வரும்? போரினால் தமிழர்களில் பெரும் எண்ணிக்கையினர் அழிந்தொழிந்த பின்னர் மனிதாபி மானம் பிறந்து பயனில்லையே!

மிகக் குறிப்பாக, தன்னை உத்தம ஜனநாயக நாடு என்று கூறிக்கொள்ளும் இந்தியா, இலங்கை ஆட்சியாளர்களின் உள்நோக்கத்தை அறிந்து போர்நிறுத்தத்துக்கு இசைய வைத்து தமிழர் அழிவைத் தடுக்கக் கூடாதா?

தனது நாட்டின் தமிழகத்தின் தொப்புள் கொடிகளே இங்கு சாகிறார்கள் என்று உணர்ந்து மனிதாபிமானத்துடன் செயற்பட மனங்கொள்ளக்கூடாதா?

இராணுவ நடவடிக்கைகள் நடைபெறும்போதே, சமாந்தரமாக அரசியல்தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும். அப்போதுதான் இலங்கையில் போர் நடவ டிக்கையை ஆதரிக்கமுடியும் என்று கொள்கை வகுத்தி ருப்பதால், இந்திய மத்திய அரசு இதுவிடயத்தில் உரிய உணர்வுடன் செயற்படமாட்டாது என்றே நம்பலாம். இதனைத் தமிழகத் தலைவர்கள் புரிந்துகொண்டு மத்திய அரசுக்கு உகந்த விதத்தில் அழுத்தம் கொடுக்கவேண்டும். ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், பேச்சுகள், அறிக்கைகள் மத்திய அரசை உசுப்புமா என்பது சந்தேகமே!

# குடாக்கடலை அண்டியுள்ள மீனவர்கள் ஆழ்கடல் தொழிலுக்குத் தயாராகின்றார்கள்

## கடல் வலயத் தடைச் சட்டம் தளர்த்தப்படும் என்ற நம்பிக்கையில்

வண்ணை, நவ.19

யாழ்.குடாக் கடலை அண்டிய கரையோரப் பகுதியில் உள்ள அரியாலை, கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் மற்றும் நாவாந்துறை மீனவர்கள் கடல் வலயத் தடைச் சட்டத்தில் தளர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையில் தமது தொழில் உபகரணங்களைத் தயார்ப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீன் பிடிக்கான கடல் பரப்பு விஸ்தரிக்கப்படுகின்ற தகவல் வெளியானதைத் தொடர்ந்து நீண்ட காலமாகப் பாவனையற்று இருந்த படகுகள், மரக்கலங்கள், வலைகள் மற்றும் உபகரணங்களைச் சீரமைத்து வருகின்றனர்.

குறிப்பாக கடற்றொழிலாளர்கள் வீதியோரத்தில் கவிழ்த்து வைத்திருந்த வள்ளங்களைச் சீரமைத்து வருகின்றனர்.

இது தொடர்பாக கடற்றொழில் கூட்டுறவுச் சமாசத்தைச் சேர்ந்த அதிகாரி தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

குருநகர் பகுதி கடல் தொழிலாளர்கள் மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். "றோலர்" வள்ளங்கள் குடாக்கடலில் தொழிலில் ஈடுபடுவது சந்தேகம்.

இயந்திரங்கள் பொருத்திய வள்ளங்களைப் பாவிக்கும் சாத்தியம் தற்கால சூழ்நிலையில் இல்லை. மேலும் றோலர் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்கள் வேறு சிறு மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக ஒரு லட்சத்து தொண்ணூறாயிரம் ரூபா பெறுமதியான வலை மற்றும் உபகரணங்கள் றோலர் தொழி லாளர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

குடாக்கடலில் உள்ள இறால் போன்ற சிறிய மீன் இனங்களை இரையாக்க கட்டா, பாரை போன்ற பெரிய இனங்கள் இவற்றைத் தேடி இங்கு வருகின்றன. ரோலர் பாவனை, சிறிய மீன் இனங்களை அழித்து விடுவதால் மீன் வரத்து யாழ்.கடல் நீர் ஏரிப் பகுதியில் குறைந்து விடும் என்பதால் றோலர் மீன்பிடி ஏற்கனவே தடைசெய்யப்பட்டு இருந்தது.

பாதுகாப்பு அனுமதியை பொறுத்து மீன்பிடி சமாசம், கடல் தொழில் திணைக்களம் என்பன இணைந்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்- என்றார்.

(202-160-224-302)

# விசேட தேவைக் கல்வி அலகு திங்கள் வைபவரீதியாகத் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் விஷேட தேவையுடைய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் செயற்பாட்டுக்கும் உரிய "விஷேட தேவைக் கல்வி அலகு" திங்கட்கிழமை காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் அமைந்துள்ள இந்த கட்டடத்தை வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

நிலையத்தின் பெயர் பலகையை உதவிப் பணிப்பாளர் த.இராசலிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

நிகழ்வில் அதிகாரிகள், முதன்மை ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(202-302)

# வடக்கு விடுவிக்கப்பட்டதன் பின்னர் 13ஆவது திருத்தச் சட்டம் அமுலாக்கப்படுமாம்

## அமைச்சர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.19

வடக்கு விடுவிக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கம் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடை முறைக்குக் கொண்டுவரும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டதன் பின்னர் அரசமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தை தாம் அமுல்படுத்துவார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக பாதுகாப்புத்துறை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல கூறினார். அலரி மாளிகையில் அமைச்சர்களுடன் நடந்த உரையாடல் ஒன்றின்போது ஜனாதிபதி இக்கருத்தை வெளியிட்டதாக கெஹெலிய ரம்புக்வெல கூறினார்.

13ஆவது திருத்தத்தை ஜனாதிபதி மூன்று கட்டங்களில் நிறைவேற்றவிருப்பதாகத் தெரிவித்துள்ளார். முதல் கட்டம் வடக்கை இராணுவமயத்திலிருந்து விலக்கியதன் பின்னரும், இரண்டாவது கட்டம் அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டியதன் பின்னரும் மூன்றாவது வடக்கை அபிவிருத்தியடையச் செய்ததன் பின்னரும் செயல்படுத்தவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்ததாக ரம்புக்வெல கூறினார்.

13ஆவது திருத்தத்தை ஒரே எடுப்பில் செயல்படுத்திவிட முடியாது. அதனால்தான் மூன்று கட்டங்களை ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றார் பேச்சாளர் ரம்புக்வெல

ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ எம்.பி.புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை அண்மையில் சந்தித்தபோது 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துமாறு இந்தியாவின் தரப்பில் வற்புறுத்தப்பட்டதாக தெரியவருகின்றது. வடக்குக் கிழக்கிற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதையும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தப்படுவதையும் வற்புறுத்தப்பட்டபோது அந்த சந்திப்பில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவு செயலர் சிவ்சங்கர் மேனன் ஆகியவர்களும் பிரணாப் முகர்ஜியுடன் இருந்துள்ளார்கள்.

# 2006 ஓகஸ்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்தோருக்கே நவம்பர் மாத உலருணவு நிவாரணம் வழங்கப்படும்

## யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மட்டுமே நவம்பர் மாதத்துக்கான உலருண்வு நிவாரணம் விநியோகிக் கப்படும் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்களை அவர் விடுத்துள்ளார்.

அந்த அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

11.08.2006 இன் முன் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மட்டும் நவம்பர் மாதத்துக்கான இலவச உலருணவு நிவாரணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2008 ஒக்ரோபர் மாத நிவாரண விநியோக முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி விநியோகத்திற்குரிய வழங்கற் கட்டளைகளை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் எடுத்து பொருள்களை களஞ்சியங்களில் இருந்து உடனடியாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கவும்.

நவம்பர் 2008 மாதத்திற்கான விநியோக நடவடிக்கைகளை விநியோக அட்டவணையின் பிரகாரம் எதிர் வரும் சனிக்கிழமை ஆரம்பித்து அடுத்த மாதம் 11 ஆம் திகதி முடிவுறுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தரமான பொருள்கள் சரியான பயனாளிகளுக்கு சென்றடைவதனையும் உரிய காலத்தில் நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்படுவதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும்- என்றுள்ளது. (202)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 05: 20.11.2008 | |
| | வியாழக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.இ.08.09வரை |
| நட்சத்திரம்: | மகம் |
| | பி.இ.01.18 வரை |
| சுபநேரம்: | 07.40 - 09.10 |
| ராகுகாலம்: | 01.40 - 03.10 |

# சத்தியசாயி பாபாவின் 83 ஆவது அவதார தின விழா ஞாயிறன்று

வலி.வடக்கு,நவ.19

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 83 ஆவது அவதார தின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணி முதல் திருநெல்வேலி சேர் பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு ஓம் காரம் சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனமும், அதனைத் தொடர்ந்து வேத பாராயணம், அஷ்டோத்திரம், நாம பஜனை என்பனவும் நடைபெறும்.

காலை 9.30 மணிக்கு இசை அமுதமும், 10.30 மணிக்கு 'நல்லதொரு குடும்பம்' நாடகமும் அதனைத் தொடர்ந்து ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு 'சாயி அவதாரம்' வில்லிசையும் 2.30 மணிக்கு 'கர்ணன்' நாடகமும் அதனைத் தொடர்ந்து பஜனை, திருவூஞ்சல், மகாமங்கள ஆரார்த்தி என்பனவும் நடைபெறவுள்ளன.

(50-86)

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு செயலமர்வும் பயிற்சிப் பட்டறையும்

யாழ்.கல்வி வலயத்தை சேர்ந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வும், செயற்பாட்டுப் பட்டறை நிகழ்வும் யாழ்.மத்திய கல் லூரியில் நடைபெற உள்ளன என யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்து நடைபெற உள்ள இந்தக் கருத்தரங்கு 23, 25, 26 ஆகிய தினங்கள் நீங்கலாக தொடர்ந்து 30 ஆம் திகதி வரை நடைபெறும். காலை 8.30 - மாலை 4.30 மணி வரை நடைபெறும் இந்தக் கருத்தரங்கு ஜேர்மன் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்படும் 'பெசு' (BESU) திட்டத்திற்கு அமைவானது.

(202-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த மாதம் சென்னையில் 20 ஓவர் லீக் போட்டிகள்!

## முரளிதரன், கப்புகெதரவும் பங்கேற்பு

சென்னை, நவ. 19

கடந்த மார்ச்-ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இந்தப்போட்டி மூலம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கோடிக்கணக்கான பணத்தை அள்ளிக் குவித்தது.

இதைத்தொடர்ந்து சம்பியன்ஸ் 20 ஓவர் 'லீக்' கிரிக்கெட் போட்டியை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவு செய்தது.

அதன்படி இந்தப்போட்டி அடுத்த மாதம் 3ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடக்கிறது. மும்பை, பெங்களூர், சென்னை ஆகிய 3 நகரங்களில் இந்தப் போட்டி நடைபெறுகிறது.

90 கோடி ரூபா பரிசுத் தொகை கொண்டது இந்தப்போட்டி. இதில் இருந்து கிடைக்கும் பணம் இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய 3 நாட்டு கிரிக்கெட்சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

இதில் 8 அணிகள் பங்கேற்கின்றன. அவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஐ.பி.எல். போட்டியில் 2ஆவது இடத்தை பிடித்த சென்னை சூப்பர் கிங்ஸ், மிடிலக்ஸ் (இங்கிலாந்து), விக்டோரியா, (அவுஸ்திரேலியா), டைட்டான்ஸ் (தென்னாபிரிக்கா) ஆகிய அணிகள் 'ஏ' பிரிவிலும், ஐ.பி.எல். போட்டியில் சம்பியன் பட்டம் பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ், மேற்கு அவுஸ்திரேலியா, சியால் கோட் ஸ்டாலியன்ஸ் (பாகிஸ்தான்), டால்பின்ஸ் ஆகிய அணிகள் 'பி' பிரிவிலும் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோதும். 'லீக்' போட்டி புள்ளிகள் அடிப்படையில் இரண்டு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்குத் தகுதி பெறும்.

சென்னையில் டிசெம்பர் 5ஆம் திகதி முதல் இந்தப் போட்டி நடக்கிறது. 5 லீக் ஆட்டமும், 2ஆவது அரை இறுதியும், இறுதிப் போட்டியும் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் விளையாடும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஹைடன், மைக்கேல் ஹஸி, முரளிதரன், அல்பி மார்கல், நிற்னி ஆகிய வீரர்கள் ஆடுவது உறுதியாகி விட்டது.

அந்த அணியின் விவரம் வருமாறு:-

டோனி (தலைவர்), ஹைடன், மைக்கல் ஹஸி (அவுஸ்திரேலியா), அல்பி மார்கல், நிற்னி (தென்னாபிரிக்கா), முரளிதரன், கப்புகெதர (இலங்கை), சுரேஷ் ரெய்னா, அருண் கார்த்திக், பட்டேல், அஸ்வின், எல்.பாலாஜி, கோனி, தியாசி பயிற்சியாளர்: பிளமிங்.




# யூசுப் பதானின் பிறந்தநாள் பரிசு

இந்தூர், நவ. 19

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் 7ஆவது வீரராக களமிறங்கிய யூசுப் பதான் தனது அதிரடி ஆட்டம் மூலம் அசத்தினார். 29 பந்தில் 4 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடித்து அரை சதம் எடுத்தார். கடைசி ஓவரில் அவர் அடித்த 2 சிக்ஸர்கள் மிகவும் அபாரமாக இருந்தன.

யூசுப் பதானுக்கு நேற்று முன்தினம் 27ஆவது பிறந்தநாள். பிறந்தநாளில் தனது முதல் அரைச் சதத்தை அதிரடியாக எடுத்தமை முக்கியமானது - என்று அவர் கூறினார்.

இப்போட்டி குறித்து யூசுப் பதான் கூறியதாவது:-

எனது ஆட்டம் எனக்கும், எனது அணிக்கும் முக்கியத்துவம் பெற்றது. என் மீது சிரேஷ்ட வீரர்கள் அனைவரும் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். ஒவ்வொருவரும் வெற்றிக்கு முக்கியபங்கு வகித்தனர்.

இந்த வெற்றி எங்களது திறமை மீது அதிக நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது. எங்களால் 7 போட்டிகளிலும் (7-0) இங்கிலாந்து அணியைத் தோற்கடிக்க முடியும். முதன்முதலாக 50 ஓட்டங்கள் எடுத்ததை பிறந்தநாள் பரிசாக கருதுகிறேன்.

-இவ்வாறு அவர் கூறினார்.

# மீண்டும் கங்குலி!



கொல்கொட்டா, நவ. 19

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற இந்திய வீரர் கங்குலி, பெங்கால் கிரிக்கெட் சங்கத்தின் சார்பில் ரஞ்சி போட்டியில் பங்கேற்க முடிவு செய்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சௌரவ் கங்குலி. இவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருடன், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். சிறிது காலத்திற்கு கிரிக்கெட்டில் இருந்து விலகி இருப்பதாக தெரிவித்திருந்த கங்குலி, தற்போது ரஞ்சி போட்டியில் பங்கேற்க இருக்கிறார்.

நேற்று முன்தினம் பெங்கால் கிரிக்கெட் சங்கத்தலைவரைச் சந்தித்த கங்குலி, தனது விருப்பத்தைத் தெரிவித்தார். இதையடுத்து அடுத்த மாதம் 12ஆம் திகதி, நாக்பூரில் தொடங்கும் விதர்பா அணிக்கெதிரான போட்டியில் கங்குலி பங்கேற்க முடிவு செய்துள்ளார். கங்குலியின் இந்த முடிவு கிரிக்கெட் ரசிகர்களிடம் மீண்டும் எதிர்பார்ப்பைத் தூண்டியுள்ளது.

# இன்ஸமாம் தலைமையிலான அணி ஐ.சி.எல். தொடரில் சம்பியனானது!

அகமதாபாத், நவ. 19

இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐசிஎல்) அமைப்பு நடத்திய 2ஆவது ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரில், இன்ஸமாம் உல் ஹக் தலைமையிலான லாகூர் பாதுஷாஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது. மூன்றாவது இறுதியில் அந்த அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் ஹீரோஸ் அணியை வீழ்த்தியது.

கபில்தேவ் தலைமையிலான ஐசிஎல் அமைப்பு நடத்திய 2ஆவது ருவென்ரி - 20 தொடர் ஹைதராபாத், சண்டிகர், குர்கான் மற்றும் அகமதாபாத்தில் நடந்தது. மொத்தம் 9 அணிகள் கலந்து கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் விளையாட லாகூர் பாதுஷாஸ், ஹைதராபாத் ஹீரோஸ் அணிகள் தகுதி பெற்றன.

மூன்று ஆட்டங்கள் கொண்ட இறுதிப் போட்டியில், இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் சமநிலை வகித்தன. மூன்றாவது மற்றும் கடைசி இறுதிப் போட்டி, அகமதாபாத் சர்தார் பட்டேல் ஸ்டேடியத்தில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் ஹீரோஸ் அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்தது. கலீல் 45, ஸ்ருவர்ட் பின்னி 25, போயே 19, கெம்ப் 22 ஓட்டங்கள் எடுத்தனர்.

அடுத்து களமிறங்கிய லாகூர் பாதுஷாஸ் அணி 13.5 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 160 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

பர்கத் 28, ஷாகித் யூசுப் 1 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடக்க வீரர் இம்ரான் நசீர் 111 ஓட்டங்கள் (44 பந்து, 7 பவுண்டரி, 11 சிக்ஸர்), முகமது யூசுப் 17 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் வெற்றியை உறுதி செய்தனர்.

லாகூர் பாதுஷாஸ் வீரர்கள் இம்ரான் நசீர் ஆட்டநாயகன் விருதும், நவேத் உல் ஹசன் தொடர் நாயகன் விருதும் பெற்றனர்.



லாகூர் பாதுஷாஸ் அணித் தலைவர் இன்ஸமாமுக்கு கோப்பையை வழங்குகிறார், இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐசிஎல்) அமைப்பின் தலைவர் கபில்தேவ்.

# யுவராஜ்க்கு பாராட்டு மழை!



இந்திய அணியில் சாதனை படைத்திருக்கும் இளம் வீரர் யுவராஜ்சிங்குக்கு பல்வேறு தரப்புக்களிலுமிருந்து பாராட்டுக்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் ஆட்டமிழக்காமல் 138 ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார் யுவராஜ். அதுபோலவே இரண்டாவது போட்டியிலும் 118 ஓட்டங்களைஎடுத்து இந்திய அணியை அவர் சரிவிலிருந்து மீட்டெடுத்து வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றார்.

இது தொடர்பாக தேர்வுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் கருத்துத் தெரிவிக்கும் போது, சௌரவ் கங்குலியின் வெற்றிடத்தை யுவராஜ்சிங் நிரப்பியிருக்கிறார் என்று புகழாரம் சூட்டியிருக்கிறார்.

''ஒருநாள் போட்டிகளில் மட்டுமல்ல டெஸ்ட் போட்டிகளிலும் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடியவர் யுவராஜ். சமீபகாலமாக அவர் ஒருநாள் போட்டிகளில் தனது திறமையை ஏற்கனவே நிரூபித்திருக்கிறார். அவர் எப்போதுமே தனது அணிக்காக நம்பிக்கையுடன் விளையாடக்கூடியவர்.'' - என்று அவர் தெரிவித்துள்ளார்.

''முதலாவது போட்டி நடைபெற்ற ராஜ்கோட் மைதானம் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமானது. எனவே, அந்தப் போட்டியில் யுவராஜ் சதமடித்தமை பெரிய விடயம் அல்ல. ஆனால் இரண்டாவது போட்டி நடைபெற்ற இந்தூர் மைதானம் அப்படியானதல்ல. இருந்தாலும் அங்கும் கூட அதிரடியாக விளையாடி சதமடித்ததன் மூலம் அவர் தனது வல்லமையை நிரூபித்திருக்கிறார்.'' என்றும் ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

இந்திய அணியின் வேறு சில முன்னாள் வீரர்களும் யுவராஜ் சிங்கிற்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். (த)

# எதிர்பாராத வெற்றி!

## டோனி மகிழ்ச்சி

இங்கிலாந்துக்கு எதிராக இந்தூரில் நேற்று முன்தினம் நடந்த 2ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 54 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் 7 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. ராஜ்கோட்டில் நடந்த முதல் ஆட்டத்தில் 158 ஓட்டங்களால் அபாரமாக வெற்றிபெற்றது.

வெற்றி குறித்து இந்திய அணித் தலைவர் டோனி கூறியதாவது:-

ஒரு கட்டத்தில் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் என்ற நிலை இருந்தது. அதில் இருந்து கம்பீரும், யுவராஜ்சிங்கும் மீட்டு நல்ல நிலைக்கு கொண்டு வந்தனர். இது மகிழ்ச்சி அளிக்கிறது. நாங்கள் 250 ஓட்டங்கள் வரை எதிர்பார்த்தோம். 290 ஓட்டங்களுக்கு மேல் குவிக்க முடியும் என்று எதிர்பார்க்கவில்லை. யுவராஜ்சிங், கம்பீர், யூசுப் பதான் மூலம் 292 ஓட்டங்களைக் குவிக்க முடிந்துள்ளது. யூசுப் பதான் அதிரடியாக ஆடியமை ஆச்சரியமில்லை. ஏனென்றால் அவரைப் பற்றித் தெரியும். அவரைப் பாராட்டுகிறேன். இந்த வெற்றியால் வீரர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் உள்ளனர். - இவ்வாறு அவர் கூறினார்.

3ஆவது போட்டி கான்பூரில் நாளை (வியாழக்கிழமை) தொடங்குகிறது.

# அகமதாபாத் டெஸ்ட் மாற்றம்?

சம்பியன்ஸ் 'ருவென்டி-20' லீக் பேர்ட்டிகள் நடக்க இருப்பதால், இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி தொடங்கும் திகதியை மாற்றவேண்டும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியா, இங்கிலாந்து அணிகள் ஒருநாள் தொடர் டிசெம்பர் 2ஆம் திகதி முடிவடைகிறது.

அடுத்து முதல் டெஸ்ட் போட்டி டிசெம்பர் 11இல் தொடங்க இருக்கிறது. ஆனால் இந்தியன் பிரீமியர் லீக்(ஐ.பி.எல்.,) சார்பில் சுமார் 90 கோடி ரூபாய் பரிசுத்தொகை கொண்ட சம்பியன்ஸ் 'ருவென்ரி-20' லீக் போட்டிகள் டிசெம்பர் 3இல் தொடங்குகிறது. இதன் இறுதிப்போட்டி டிசெம்பர் 10 ஆம் திகதி, சென்னையில் நடக்கவுள்ளது.

இதனையடுத்து அடுத்தநாள் அகமதாபாத்தில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் தொடங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சம்பியன்ஸ் லீக் தொடரில் டோனியின் சென்னை சூப்பர் கிங்ஸ், ஒருவேளை இறுதிப் போட்டியில் பங்கேற்றால், மறுநாள் இங்கிலாந்து டெஸ்டில் பங்கேற்பதில் பிரச்சினை ஏற்படும்.

இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, டோனிக்கு ஆதரவாக செயல்படஇருக்கிறது. டெஸ்ட் போட்டியை டிசெம்பர் 12க்கு மாற்றுமாறு இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் இதுசம்பந்தமாக இன்னும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என இங்கிலாந்து அணியின் முகாமையாளர் வால்போல் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவத்தினை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு இயற்கை மிருக வைத்தியராக மாறிய சின்னக்கண்டு அப்பா!



வெள்ளை வேட்டியணிந்த மெலிந்த உருவம். வெள்ளைத் தேகம். நெற்றியில் எப்போதும் திருநீற்றுப் பூச்சு. வாரி முடிந்த தலைமுடியுடன் சிறிய கொண்டை. தொண்ணூற்றாறு வயது. கையில் ஜமீன்தார் காலத்தை ஒத்த சிறியதடி. மெல்ல மெல்லத் தனது வளவில் உலாவித் திரிவார். இது தான் சின்னக்கண்டு அப்பா.ஆனால் இயற்கை மிருக வைத்தியம்தொடர்பில் ஞானம்




மிகவும் கைவரப் பெற்ற அற்புத மனிதர்.

தென்மராட்சியில் நிலவளம், நீர்வளம், சிறிய காட்டுவளம், ஏரிக்கடல்வளம், வாய்க்கப்பெற்றது கைதடிக் கிராமம். அறவோரும், தரும சீலர்களும் நிறையப் பெற்ற மண். ஆதலால்தான் இங்கே அரச முதியோர் இல்லம், சிறுவர் இல்லம், நவீல்ட் பாடசாலை, இரட்சணியசேனை இல்லம் என்பன உள்ளன.

அத்தகைய பேறுபெற்ற இக்கிராமத்தில் 1912ஆம் ஆண்டில் பிறந்தவர்தான் சின்னக் கண்டு அப்பா என அன்பால் அழைக்கப்படும் கதிரன் கணபதி. கைதடி வடக்கில் பிறந்து, வளர்ந்து அவ்வூரைச் சேர்ந்த வைரவி அம்மையாரைத் திருமணம் புரிந்து 4 பெண் பிள்ளைகளுக்கும், ஓர் ஆண் பிள்ளைக்கும் தந்தையாகி, தற்போது நவபுரம் கிராமத்தில் தொண்ணூற்றாறு வயதில் வாழ்ந்து வருகின்றார்.

தன்னுணர்வால் கற்றுணர்ந்த மிருக வைத்தியத்தால் ஏராளம் உயிர்களைக் காப்பாற்றியவர்.

அவரைப் பற்றிப் பலரும் கூறக் கேள்விப்பட்டதால் சந்திப்பதற்காக நவபுரத்திலுள்ள அவரது இல்லம் சென்றோம். அவர் தற்போது தனது மூத்த மகளின் குடும்பத்துடன் வசித்து வருகின்றார்.

கே: மிருக வைத்திய ஈடுபாட்டின் ஆரம்பம் பற்றிக் கூறுங்கள்?

பதில்: சிறுபராயம் முதலே ஆடு, மாடு வளர்ப்பதில் எனக்கு நிறைய விருப்பம். அக்காலத்தில் அவை குட்டி ஈனுகையில் சில சமயம் சிக்கல் நிலை தோன்றும்போது வலியால் துடிப்பதைக் கண்டேன். என்னுள் ஏதோ ஓர் உள்ளறிவு என்னை வழிப்படுத்தி அவற்றின் பிரசவச் சிக்கல்களைத் தீர்க்கும் செயற்திறனைத் தந்தது. அவ் அறிவைத் தொடர்ந்தும் பிரயோகித்தேன். அவை சுகம் பெற்று நலமாக இருப்பது பேரானந்தம் தந்தது. குறிப்பாக ஆடு,

## கைதடிக் கிராமத்தின் கால்நடை விலங்குகளுக்கு உயிர்தரும் 'சஞ்சீவி' இவர்தான்

மாடு குட்டி ஈனும் போது இளங்கொடி விழாமல் தவிக்கும் அதிக சந்தர்ப்பங்களில் அவற்றைச் சுகப்படுத்தியுள்ளேன். சில சமயம் சத்திர சிகிச்சை முறை மூலமும் குட்டி ஈனச்செய்து தையல் போட்டும் உள்ளேன். அவை பின்னர் சுகம் பெற்று வாழ்ந்துள்ளன.

அத்துடன் நாம்பன் மாடுகளை (காளை) வீரியமிழக்கச் செய்யும் பணி, குறி சுடுதல் ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளேன்.

கேள்வி: உங்களது கல்வியறிவு நிலை, பிரதான, உப தொழில்கள் பற்றிக் கூறுங்களேன்?

பதில்: அக்காலத்தில் 5 ஆம் வகுப்பு வரை படித்தேன். எழுத, வாசிக்க, தேவாரம், புராணம் படிக்க எனக்கு நன்றாகத் தெரியும். தோட்டம், வயல்தான் எனது பிரதான தொழில். இதற்கான பசளைத் தேவையின் பொருட்டு ஆடு, மாடு வளர்ப்பதை உப தொழிலாகக் கொண்டிருந்தேன்.

*இதை இவர் கூறி முடிக்க முன்பு அருகில் நின்ற மனைவி "தோட்டம், வயல் என்று கூறுகின்றார்.ஆனால் ஆடு, மாட்டுக்கு பிரச்சினையென்று யாரும் வந்தால் உடனே போட்டதை போட்டபடியே விட்டு விட்டுப் போய் விடுவார். இதனால் விவசாய வருமானங்கள் சீரழிவு நிலை தான். பார்த்த வைத்தியத்திற்கு காசும் கேட்டு வாங்க மாட்டார். தருவதை எண்ணிப் பார்க்காமல் கொண்டு வந்திடுவார் என்றார்".* இயற்கை இவரவழிகாட்டியாகவும், வாழ்க்கை இவரது தத்துவாசிரியனாகவும் இருந்துள்ளன போலும்.

அக்காலத்தில் இவர் தென்மராட்சியின் மூலை முடுக்குகள், வலிகாமத்தின் பல பிரதேசங்கள், வன்னிப் பகுதிகள் என்பவற்றுக்கும் சென்று மிருக வைத்தியம் பார்த்ததைப் பலரும் கூறக் கேட்க முடிகிறது.

பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும் என்று கூறுவார்கள். அதுபோல இவரது 4 பெண் பிள்ளைகளும் கைதடிக் கிராமத்தில் சீருஞ்சிறப்புமாக வாழ்ந்து வருவதையும், முன்பு அரச சேவையில் அதிகாரியாக இருந்த இவரது மகன் சுவீடனில் நல்ல நிலையில் வாழ்ந்து வருவதையும் அறிய முடிகிறது.

அக்காலத்தில் சாவகச்சேரி அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி இவரது திறமையை வியந்து பாராட்டிப் பேசியதாக ஊரவர்கள் கூறக் கேட்க முடிகிறது.

கைதடியில் தற்போது வசித்துவரும் ஓய்வுபெற்ற அரச வைத்திய அதிகாரி இவரைப் பற்றிக் கூறும் போது "20 வருடங்களுக்கு முன்பு எனது வீட்டில் ஆடு ஒன்று குட்டி ஈன்று இளங்கொடி விழாமல் தவித்தபோது இவரைப் பற்றி அறிந்து அழைத்து வந்தேன். இவர் வந்து ஆட்டைப் பார்த்துவிட்டு இன்னுமொரு குட்டியையும் நல்ல நிலையில் பிரசவிக்க வைத்து இளங்கொடியும் விழச்செய்தார். ஆட்டையும் சுகப்படுத்தினார். இவ் அரிய செயலை, இயற்கை அளித்த விஞ்ஞாக ஆற்றலைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தேன்.

சின்னக்கண்டு அப்பா முதுமையினால் தற்போது ஓய்வெடுத்து வருகின்றார். தான் பிறந்த பூமிக்கு ஏதோ ஒன்றை நிறைவாகச் செய்த சேவையின் திருப்தி அவரது முகத்தில் தெரிகிறது. பயனுள்ள மனிதராக வாழ்ந்த நிறைவு அவரின் சந்ததிகளையும் நன்றாக வாழ வைத்துள்ளது.

-மருதன் ,கைதடி.

# இலங்கை அரசு தன் அரசியல் தீர்வுத் திட்டத்தை தெளிவாக வெளியிட வற்புறுத்துகிறது இந்தியா

## இராணுவ செயற்பாட்டை ஆதரிக்க நிபந்தனை

கொழும்பு, நவ.19

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கம் தன்னை உறுதியாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்று இலங்கை ஜனாதிபதி இந்தியத் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் இலங்கை பயங்கரவாதத்திற்கு எதிராக எடுக்கும் இராணுவ நடவடிக்கைகளின் போதே தனது அரசியல் தீர்வுத் திட்டத்தையும் என்னவென்று தெளிவாக முன் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவால் அதன் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க முடியும் என்று இந்தியா தெரிவித்து விட்டதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தெளிவான அரசியல் தீர்வுத் திட்டமொன்றையும் இலங்கை அரசு முன்வைத்ததால்தான் அதன் இராணுவ நடவடிக்கையை ஆதரிப்பதாக இந்தியாவால் சர்வதேச சமூகத்திடம் கூற முடியும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

அதுவரை இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை இந்தியாவால் ஆதரிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

### சிவபூமி முதியோர் இல்லத்துக்கு கார் அன்பளிப்பு

சுழிபுரம், நவ.19

நீண்ட காலமாக தமது சொந்தப் பாவனையில் வைத்துப் பராமரித்த மொறிஸ் மைனர் காரை ஓய்வுபெற்ற பொறியியலாளர் கனகசபை தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லப் பாவனைக்கென அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவர் இந்தக் காரின் வாகன உரிமப் புத்தகத்தை சிவபூமி முதியோர் இல்லத் தலைவர் ஆறு.திருமுருகன் பேருக்கு மாற்றி ஒப்படைத்துள்ளார். (204-28)

### தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு செயல்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.19

மத்திய அரசாங்க, மாகாண அரசாங்க சேவை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான செயல்முறைப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

1994-2004(2006) இல் முதலாம், இரண்டாம் திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றிய உத்தியோகத்தர்களுக்கே இப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்து வாழும் உத்தியோகத்தர்கள் வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அலுவலகத்துடன் 060 226 2951 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

### நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ.19

இறப்பு, பிறப்பு, திருமணப் பதிவு, தேசிய அடையாள அட்டை ஆகியவை பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை இரு தினங்கள் நடைபெறவுள்ளன.

இந்தச் சேவை நாளை வியாழக்கிழமையும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் யாழ்.மாநகரசபை அலுவலகத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (202)

## ஆறுமுக நாவலர் குருபூசையை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.19

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தினத்தையொட்டி யாழ். சைவ பரிபாலன சபை பேச்சு, கட்டுரைப் போட்டிகளை அண்மையில் நடத்தியது.

இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

பேச்சு

*கீழ்ப்பிரிவு:* இரவீந்திரன் சஞ்சீவ் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), நவநீதா சிவநேசன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), விதுர்ஷா பழனித்துரை(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

*மத்திய பிரிவு:* அருள்பரன் உமாகரன் (யாழ்.இந்துக் கல்லூரி), மனோகரதாஸ் மிதுன்பரிசித்(யாழ்.மத்திய கல்லூரி), பவித்திரா சிவஞானம்(மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

*மேற் பிரிவு:* நந்தினிதேவி ஜெகநாதன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), அஜந்தா தேவராசா(மானிப்பாய் மகளிர் கல்லூரி), கௌதமி றஞ்சன்(இராமநாதன் கல்லூரி).

கட்டுரை

*மேற்பிரிவு:* கல்யாணி தங்கராசா (இணுவில் மத்திய கல்லூரி), ஜலயா விஜயகுமார்(இராமநாதன் கல்லூரி), ராஜினி முருகையா(சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். (202)



*யாழ்.கோட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்கம் 16 முன்பள்ளிகளுக்கிடையே நடத்திய விளையாட்டுப் போட்டியில் இக்ரஃ முன்பள்ளி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுடன் ஆசிரியர்களான நி.கிறிஸ்தவராணி, சித்தி மர்லியா ஆகியோர் காணப்படுகின்றனர்.*

### நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதியில் நிலத்தடி வடிகால்

யாழ்ப்பாணம், நவ.19

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் மேற்கு வீதியில் நிலத்தடி வடிகால் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆலய வெளிவீதிச் சுற்றாடலில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்காது வழிந்தோடுவதற்கு வசதியாக இந்த நிலத்தடி வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. (202-224)

### சிவபூமி முதியோர் இல்லத்தில் ஆறுமுக நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், நவ.19

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆறுமுக நாவலர் குருபூசை நடைபெறவுள்ளது.

சிவபூமி முதியோர் இல்லத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (204)

### எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு ஊர்காவற்றுறையில்

யாழ்ப்பாணம், நவ.19

போரூட் நிறுவனத்தின் ஊர்காவற்றுறைப் பிரிவின் கிராமங்கள் தோறும் எச்.ஐ.வி.எயிட்ஸ் தொற்றுநோய் குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினருடன் இணைந்து விழிப்புணர்வு தொடர்பான கையேடுகளையும் விநியோகித்து வருகின்றனர். (202-235)

### கோப்பாய் மருத்துவமனையில் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் தட்டுப்பாடு

கோப்பாய், நவ.19

கோப்பாய்ப் பிரதேச மருத்துவமனையில் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

சிகிச்சை பெறச் செல்லும் வெளிநோயாளர்களுக்கு இம் மருந்துகளை வெளியில் பெறுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பல்வேறு இடங்களில் இருந்து வரும் நோயாளர்கள் மேலும் சிரமத்தை அடைவதாக கவலை தெரிவிக்கின்றனர். (202-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் விடுதி அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் விடுதியினை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும்-

நிகழ்வில் கலந்து கொண்ட பொது மக்களையும் முதலிரு படங்களிலும் காணலாம்.

புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் விடுதியை மூன்றாவது படத்தில் காணலாம்.

# தாவர சங்க அணிகள் அனைத்தும் பின்பற்றும் கூட்டுறவுப் பண்பு மனித வாழ்வில் அருகிவிட்டது

## ஆசுகவி சுப்பிரமணியம் கவலை வெளியிடுகிறார்

யாழ்ப்பாணம், நவ.19

தாவர சங்க அணிகள் அனைத்தும் தொடர்ந்தும் கூட்டுறவு வாழ்வுமுறையையே பேணி வருகின்றன. ஆனால் இந்தக் கூட்டுறவுப் பண்பு மனித வாழ்வில் அருகிவிட்டது.

இவ்வாறு கவலை வெளியிடுகின்றார் ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம்.

வட்டு.மூளாய் கூட்டுறவுச் சங்கத்தின் பவளவிழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 'கூட்டுறவில் மக்கள் பங்கு' என்னும் தலைப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியவை வருமாறு:

கூட்டுறவு என்பது எமக்கு ஒரு புதிய விடயமல்ல. உலகம் தோற்றம் பெற்ற காலம் தொடக்கம் கூட்டுறவுத் தொழிற்பாடு முதன்மை பெற்றுவந்தமை வரலாறு உணர்ந்த உண்மை. வரலாற்றுப் பரிமாண வளர்ச்சியை ''புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகிப் பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய் மனிதராய் பேயாய் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய் தேவராய் செல்லா நின்ற தாவரசங்கம் என்னும் அடிகளால் மாணிக்கவாசகர் வெளிப்படுத்தினார். இத் தாவர சங்கமத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு வகையான உயிரினங்களும் உற்பத்தி தொடக்கம் மறையும் வரை கூட்டான தொழிற்பாட்டைக் கொண்டிருப்பதைக் காணமுடியும்.

அவர்களின் வாழ்வாதாரத்திற்கான உணவை கூட்டாகத் தேடின. அனர்த்தம் ஏற்படும் காலத்தில் கூட்டாகப் பாதுகாப்பை நாடின. இதே நடைமுறையைத்தான் மனிதனும் ஆதிகாலம் தொட்டு அனுசரித்து வந்தான்.

ஆனால் இப்பொழுது மனிதனைத் தவிர ஏனைய தாவரசங்க அணி தொடர்ந்தும் கூட்டுறவு வாழ்வு முறையைப் பேணும் தன்மையைக் காணலாம். இப்பண்பு இப்பொழுது மனித வாழ்வில் அருகிவிட்டது. வெளித் தோற்றத்தில் இவை இருப்பது போல் தோன்றினாலும் உள்ளடக்கத்தில் அவற்றிற்கு எதிர்மறை விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன.

இவற்றைச் சீர்செய்யும் நடவடிக்கையாக கூட்டுறவு வாழ்வு ஒவ்வொருவருடைய வீட்டிலும் ஆரம்பிக்க வேண்டும்.- என்றார்.

இவ்விழாச் சங்கத் தலைவர் க.இராதகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக திருமதி பொன்மலர் இராஜேஸ்வரனும் சிறப்பு விருந்தினராகக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதியும் கலந்து கொண்டனர்.

பவள விழவை முன்னிட்டு சங்கச் செயற்பாடுகளை ஆவணப்படுத்தும் வகையில் பவள விழா மலர் வெளியிடப்பட்டது. இம்மலரை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி வெளியிட்டு உரை நிகழ்த்தினார்.

(202)

# காரைநகர்ப் பிரதேச உள்ளூராட்சி வாரப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.19

காரைநகர்ப் பிரதேசசபை உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**முன்பள்ளிகளுக்கான விளையாட்டுப் போட்டி**

அம்பாள் முன்பள்ளி, விளானை முன்பள்ளி, ஸ்ரீ சிதம்பரேஸ்வரா முன்பள்ளி.

**பொது அறிவு**

வி.பாலேந்திரன் (தரம் 12, யாழ்ற்ரன் கல்லூரி), இ.சுபாஜினி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), த.துசியந்தி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.).

(202-29)

# தனியார் பஸ் ஊழியர்களுக்கு ஜனவரி தொடக்கம் சீருடை

கொழும்பு, நவ.19

தனியார் பஸ் ஊழியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் முதல் சீருடை வழங்கப்படவுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு ஏற்ப தனியார் பஸ்களில் 'டிக்கெட்' இயந்திரம் மற்றும் சீருடைப் பாவனை என்பன திட்டவட்டமாக அமுலுக்கு வருகின்றன என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்று முன்தினம் உயர் நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்களில் கடமையாற்றும் பஸ் நடத்துநர்களுக்கு டிக்கட் இயந்திரம் மற்றும் சீருடை வழங்கும் நடவடிக்கைகளை டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும்.

தனியார் துறையினதும் இலங்கைப் போக்குவரத்துச் சபையினதும் ஒருங்கிணைக்கப்பட்ட சேவைக்கான நேர அட்டவணை மட்டும் இதுவரை தயாரிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வாகன நெரிசல் மற்றும் வாகனப் போக்குவரத்தால் சுற்றாடல் பாதிக்கப்படுவதற்கு எதிராகச் சட்டத்தரணி கீதாணி விஜேசிங்கவால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போதே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மற் றும் சந்திரா ஏக்கநாயக்க, கே.பவன் ஆகிய நீதி அரசர்கள் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(202)

# மருந்துகளை கையாள்வதும் சேமித்து வைத்தலும்

## நோயாளிகள் கவனிக்க வேண்டிய சில முக்கிய தகவல்கள்

மருந்துகளின் உபயோகம் இன்றைய உலகில் ஓர் அத்தியாவசியமான பொருளாதாரப் பரிணாமமாக மாறியுள்ளது. மருந்துகளை உயிர்காக்கும் மருந்துகள், அத்தியாவசியமான மருந்துகள், தேவையான மருந்துகள் என மூன்று நிலைகளாக முன்னுரிமை அடிப்படையில் வகைப்படுத்தலாம். நோயினால் பாதிக்கப்படும் மனிதனும் நோய் வராது காக்கும் மனிதனும் மருந்தினைத் தனது அன்றாட நுகர்வுப் பொருளாக்கி விட்டனர். இதனால் மருந்துகளின் உற்பத்தி, கொள்வனவு, விநியோகம் என்பன வர்த்தகத்துறைகளாகிவிட்டன. வர்த்தகம் என்பது இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டது என்பதனாலும் இங்கு நுகர்வோர் நோயாளிகள் ஆகையாலும் இவற்றின் அடிப்படையில் உள்ள பாதிப்புக்களை ஆராய்ந்து விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் இன்றியமையாததாகும்.

மருந்துகளின் தர நிர்ணயத்தில் மருந்துகளின் சேர்மானம்,உற்பத்தி செய்யப்படும் முறை, உற்பத்தி செய்யும் உபகரணங்களைக் கையாளும் முறை, உற்பத்தி செய்யும் சூழல், மருந்துடன் சேர்க்கப்படும் துணைப் பொருள்கள், மருந்துப் பதார்த்தங்கள், பொதி செய்யப்படும் முறை, உற்பத்தி செய்யப்பட்ட மருந்தின் தரத்தினைக் கண்டறியும் முறை என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன.

**மருந்துகளைப் பெற்றுக்கொள்ளல்**

மருந்துகளின் நுகர்வில் அவற்றின் உற்பத்தியினை அடுத்து அவற்றினைப் பெற்றுக்கொள்ளும் முறை செல்வாக்குச் செலுத்துகின்றது. சரியான மருந்துகளைத் தேவையான அளவிற்கு நம்பகமான இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். வர்த்தக நோக்கில் மருந்துகளைக் கொள்வனவு செய்ய நேரிடும் போது தரம் குறைந்த அல்லது குறைந்த வீரியம் உடைய மருந்துகளைக் கொள்வனவு செய்யநேரிடலாம்.

மருந்தின் தேவையினை நிர்ணயிக்கும் போது எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை மருந்துகள் கொள்வனவுசெய்யப்படுதல், தேவையான இருப்பின் அளவு, மருந்து வந்துசேர எடுக்கும் காலம் என்பன கருத் தில் எடுக்கப்படும். குறித்த மருந்துகளின் சராசரி மாத நுகர்வின் அளவினை மடங்கில் மருந்துத் தேவை நிர்ணயிக்கப்படும். இங்கு இருப்பின் அளவு எவ்வளவு காலத்திற்குப் போதியதோ, அக்காலத்தினையும் மருந்து வர நேரம் எடுக்கும் காலத்தினையும் எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை மருந்து கொள்வனவு செய்யப்படுகின்றது என்ற காலத்தினையும் கூட்டி அதனை நாம் சராசரி மாத நுகர்வினால் பெருக்கினால் எமக்குத் தேவையான மருந்தின் அளவினைப் பெறலாம். இவ்வாறு நிர்ணயித்த மருந்துகளை நாம் பெற்றுக் கொண்டால் மருந்துத் தட்டுப்பாடு ஒரு போதும் வரமாட்டாது. மேலும் இவற்றினைக் கணனிமயப்படுத்தும்போது வேலை மிகவும் சுலபமாகும்.

**மருந்துகளைச் சேர்த்து வைத்தல்**

அடுத்து மருந்துகளின் நுகர்வில் அவற்றினைக் களஞ்சியப்படுத்தலும் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மருந்திற்கும் குறித்த வெப்பநிலையில் பாதுகாக்கப்படல் அவசியம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். உதாரணமாக 28c° - 30c° எனக் குறிப்பிடப்பட்டு இருப்பின் அவற்றைச் சூரிய ஒளிபடும் இடங்களில் வைக்கக் கூடாது. கடுமையான ஈரப்பதன் அல்லது ஈரலிப்பு உள்ள இடங்களில் பாதிப்புக்கள் அதிகம் ஏற்படும். அசுத்தமான இடங்களில் மருந்துகளைச் சேகரிக்கக்கூடாது. மேலும் சேதம் ஏற்படாது களஞ்சியப்படுத்தபடல் வேண்டும். ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கும் போது அடியில் உள்ளவை உடைந்து நொருங்கிப் போகலாம். மேலும் பாதுகாப்பான இடங்களில் களஞ்சியப்படுத்தல் அவசியம்.

சேதமடைந்த மருந்துகளை அவற்றின் நிறமாற்றம், வடிவ மாற்றம், பருமனில் ஏற்படும் மாற்றம் என்பனவற்றிலிருந்து அறியலாம். மேலும் மருந்தின் காலாவதியாகும் திகதி முடிந்து இருப்பின் அம்மருந்துகளைப் பாவிக்கக் கூடாது.

சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் மருந்து நுகர்வில் சிறந்த பலனைப் பெறலாம். அன்றேல் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படலும், தரமற்ற மருந்துப் பாவனையும் அதிகரிக்கும். குறித்த காரணத்தினால்தான் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்று கூறுவதைவிடுத்து நாம் சிறந்த மருந்து முகாமைத்துவத்தினைக் கடைப்பிடித்தால் நோயாளிகள் பாதிக்கப்படமாட்டார்கள்.

குறிப்பாக இலங்கையில் கடந்த 3 மாதங்களாகக் ·காசநோய் மருந்துக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. ஆனால், யாழ்ப்பாணத்தில் அவ்வாறான தட்டுப்பாடு இல்லை. ஏனெனில் எம்மால் மருந்துகள் சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்தப்பட்டமையே. இவ்வாறே நாம் ஏனைய மருந்துகளுக்கும் மேற்கொள்ளலாம். குறிப்பாக உயிர் காக்கும் அத்தியாவசிய மருந்துகளுக்கு மிகவும் அவசியமானது மருந்து முகாமைத்துவம். நெருக்கடி நிலைகளின்போது மருந்து முகாமைத்துவம் இன்றி அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதும், அம்மருந்துகளை வைத்திருப்போர் அதிக பணத்திற்கு விற்பதும், அம்மருந்துகள் இல்லாது பலர் இறப்பதும் எமது கண் முன்னே பல தடவைகள் கண்டுள்ளோம். ஆனால் அவை மீளமீள ஏற்படாது இருக்க மருந்து முகாமைத்துவ விழிப்புணர்ச்சி மக்களுக்கும் மருத்துவத்துறை சார்ந்தவர்களுக்கும் மருந்துகளைக் கையாள்பவர்களுக்கும் ஏற்பட வேண்டும். மருந்துகால் மதி முக்கால் என்பது மருந்துகளின் நுகர்வில் மாத்திரமல்ல மருந்துகளின் முகாமைத்துவத்திலும் பொருந்தும் முதுமொழியாகும்.

டாக்டர் சி.யமுனானந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்குமுறையின்றி மின்வெட்டு நடைமுறை; பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,நவ.19

குடாநாட்டில் ஓர் ஒழுங்குமுறையின்றி, அதிகரித்த நேரத்தில் மின்வெட்டு நடை முறைப்படுத்தப்படுகின்றது. ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தயாராகும் மாண வர்களும் ஆண்டிறுதிப் பரீட்சையை எதிர் கொள்ளும் மாணவர்களும் கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாது தாங்கள் சிரமப்படுகின்றனர் எனக் கவலை வெளியிடுகின்றனர்.

குறிப்பிட்ட பிரதேசங்களில் ஒழுங்கு முறைப்படி குறிப்பிட்ட நேரத்துக்கே மின் வெட்டு அமுல்படுத்தப்படும் என மின்சார சபை அறிவித்திருந்தது. எனினும் அந்த அறிவித்தலின் பிரகாரம் மின்சார சபை செயற்படுவதில்லை என மக்கள் முறையிடுகின்றனர்.

யாழ். நகரப் பகுதிகளில் ஒருநாள் முன்னிரவு 5.50இற்கு மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு 7.20 அல்லது 7.30 மணிக்கே மீண்டும் மின்சாரம் கிடைக்கிறது. (1.30 மணிநேரத்துக்கு அதிகம்) மறுநாள் 7.20 அல்லது 7.30 மணிக்கு மின்வெட்டு இடம் பெற்று 8.30 மணிக்கு மின்சாரம் கிடைக்கிறது. (ஒரு மணிநேரம்).

புறநகர் பகுதிகளிலும் இவ்வாறான ஒரு மின்வெட்டு அறிவிக்கப்பட்ட அட்டவணைப்படியின்றி அமுலாகும் நடைமுறையே இடம்பெறுகின்றது.

வேறுபட்ட மின்வெட்டு நேரத்தால் மாணவர்கள் தமது கற்றலை ஒழுங்காக மேற்கொள்ளமுடியாது சிரமமடைகின்றனர்.

அதேபோன்று ஏனைய மின்பாவனையாளர்களும் இந்த மின்வெட்டுக் குளறுபடியால் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

பரீட்சைக் காலத்திலாவது மாணவர்களின் நன்மை கருதி மின்வெட்டு நேரத்தைக் குறைக்கவும், மின்வெட்டு நேரத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்தவும் ஆவன செய்யவேண்டுமென பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (202-149)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கட்டில்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சிறுவர் விடுதிக்கு, சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையினால் கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் விடுதி அண்மையில் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-207)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# புங்குடுதீவுப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த விவசாயிகள் 24 பேருக்கு இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

புங்குடுதீவு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 24 பேர் சிறந்த விவசாயிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்குப் பெருங்காடு கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விவசாயப் போதனாசிரியர் பொ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக நெடுந்தீவு உதவி அரச அதிபர் என்.திருலிங்கநாதன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர்.

விழா மண்டபத்தில் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. றுவான் இன சோளவிதையும், திஸ்ஸ இன நிலக்கடலை விதையும், ரவி இன குரக்கன் விதையும், தொழில்நுட்ப தகவல் அடங்கிய துண்டுப்பிரசுரங்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

கௌரவிக்கப்படவுள்ள விவசாயிகள் விவரம் வருமாறு:

*சிறந்த நெல் உற்பத்தியாளர்:* கோ.வாமதேவன் (நயினாதீவு), கை.ஸ்ரீகாந்தன் (புங்குடுதீவு), த.நவரெத்தினம் (நெடுந்தீவு).

*சிறந்த சேதனப் பண்ணையாளர்:* மு.இலங்கநாதன் (நெடுந்தீவு), அ.முத்துலிங்கம் (நயினாதீவு), வை.சகாதேவன் (நெடுந்தீவு).

*சிறந்த சுயவிதைநெல் உற்பத்தியாளர்:* ந.புவனேந்திரகுமார் (நெடுந்தீவு), பொ.இராசரெத்தினம் (நயினாதீவு), தா.றெக்சியன் (புங்குடுதீவு).

*சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்:* நா.முத்துக்குமாரி (புங்குடுதீவு), இ.உதயநேசன் (நயினாதீவு), வை.கல்விராசா (புங்குடுதீவு).

*சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி:* திருமதி மு.ஞானேஸ்வரி (நயினாதீவு), திருமதி யோ.தனேஸ்வரி (புங்குடுதீவு), திருமதி ப.பத்மசோதி (நெடுந்தீவு).

*சிறந்த சோளச்செய்கையாளர்:* ச.துரைராசா (நெடுந்தீவு), அ.கந்தையா (நயினாதீவு), க.நாகசிவனேஸ்வரி (நயினாதீவு).

*சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்:* சி.ஞானேஸ்வரி (நயினாதீவு), க.நாகம்மா (புங்குடுதீவு), கு.பாக்கியவதி (புங்குடுதீவு).

*சிறந்த குரக்கன் செய்கையாளர்:* க.சேனாதிராசா (நெடுந்தீவு), நா.பகீரதன் (நெடுந்தீவு), மா.இராயப்பு (புங்குடுதீவு). (202-111)

## வியாழ மாற்றத்தையொட்டி 6ஆம் திகதி யாகம்

யாழ்ப்பாணம்,நவ.19

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவன நாத சிவன் கோயிலில், வியாழ மாற்றத்தையொட்டி எதிர்வரும் ஆறாம் திகதி யாகம் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ தி.உமாசுத குருக்கள் தலைமையில் காலை 8 மணிதொடக்கம் பி.ப. 3 மணி வரை யாக பூசை நடைபெறும். (202-207)

## நிவாரணம் விநியோகம்

நவாலி,நவ.19

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் உலக உணவுத் திட்டத்தின் நலிவுற்றோருக்கான நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (202-100)

## கண் சத்திர சிகிச்சை

சுழிபுரம்,நவ.19

மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் கண் சத்திரசிகிச்சை நடைபெற்று வருகின்றது. (202-28)

## நாச்சிமார் கோயில் குளம் மாசுறுவதைத் தடுக்க குப்பைத்தொட்டி கையளிப்பு

நல்லூர்,நவ.19

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் குளத்தின் பாதுகாப்புக் கருதி அமைக்கப்பட்ட குப்பைத்தொட்டியை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆலயக் குருக்களிடம் அண்மையில் கையளித்தார்.

கோயில் குளம் மாசடையாமல் இருக்கும் பொருட்டு, 'சொன்ட்' அமைப்பு மேற்படி தொட்டியை அமைத்துக்கொடுத் துள்ளது.

தொட்டி கையளிப்பு நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் சனசமூக நிலையங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ரி.சோமசுந்தரமும் கலந்துகொண்டார். (202-100)

## முட்டை விலை அதிகரிப்பு

நவாலி,நவ.19

வலிகாமம் பகுதிகளில் முட்டையின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.

கோழித்தீன் விலையேற்றம் காரணமாக கோழி வளர்ப்பில் ஈடுபட்ட பலர் அதனைக் கைவிட்டுள்ளனர்.

இதனால் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் விலையும் அதிகரித்துக்கொண்டே போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-100)



பருத்தித்துறை தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தினால் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்குகள் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன.
இதில் பங்குகொண்ட மாணவர்களை முதலாவது படத்திலும், கணிதபாடச் செயலமர்வினை யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் சோ.கிருஸ்ணதாஸ் நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# புலமைப் பரிசில் பரீட்சை என்பது கௌரவப் பிரச்சினையாகிவிட்டது

## மாணவர்களுக்குச் சுமை என்கிறார் உதவிப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம்,நவ.19

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை பெற்றோர்களிடையே கௌரவப் பிரச்சினையாக அண்மைக் காலமாக மாறிவருகிறது. இதனால் பெற்றோர் தமது பிள்ளைக்கு சிறுவயதிலேயே பெரும் மன அழுத்தங்களைச் சுமத்துகின்றனர்.

பாடசாலையிலிருந்து வீடு வந்ததும் 'ரியூசனுக்குப்' போ எனவும், அங்கிருந்து களைத்து வந்தாலும் பாடத்தைப் படி எனவும் வற்புறுத்துவதால் பிள்ளைக்குப் படிப்பு ஒரு சுமையாக மாறிவிடுகிறது.

களைத்து வரும் பிள்ளையை அன்பாக அரவணைத்து, அவர்களது பாடத்திட்டங்களை நாமும் சொல்லிக்கொடுத்து மனோதிடத்தை ஏற்படுத்தினால் அந்தப் பிள்ளை நிச்சயம் பரீட்சையில் சித்திபெற்றுச் சாதனை படைக்கும்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு வலயத்தினரால் நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் உரையாற்றுகையில் இவ்வாறு தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் குறிப்பிட்டார்.

மேலும் உரையாற்றுகையில் அவர் தெரிவித்தவை வருமாறு:

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை நீண்டகாலமாக நடத்தப்பட்டு வருகிறது. அன்றைய காலங்களில் இப்பரீட்சை மாணவர்களின் திறமையைச் சோதிப்பதற்காகவே நடத்தப்பட்டது. பரீட்சையில் தோற்றும் மாணவர்களும் பாடசாலைக் கல்வியைப் போட்டி போட்டுக் கற்றார்கள்.

மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலேயே இப்பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கி, அவர்களின் உயர்கல்வியைத் தொடர கல்வி அமைச்சினால் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் பெற்றோர்களோ இத்திட்டத்தைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல், பிள்ளை பரீட்சையில் சித்தி பெறுவது கட்டாயம் என நினைப்பதால் இன்று இப்பரீட்சை கௌரவப் பிரச்சினையாக மாறிவிடுகிறது.

இவ்வருடம் பரீட்சை முடிந்த கையோடு பரீட்சைக்குச் சென்ற மாணவர்கள் அழுது கொண்டு வீடு திரும்பினார்கள் எனப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்தச் செய்தியின் மூலம் எமக்குக் கிடைத்த தெளிவான கருத்து பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்த அழுத்தங்களே காரணமெனலாம்.

புலமைப் பரிசில் பரீட்சை பாரதூரமானதோ அல்லது மாணவர்களை வாட்டி வதைக்கக் கூடியதோ அல்ல. பரீட்சையில் சித்தியடையாத மாணவனும் சித்தியடைந்த மாணவர்களுடனேயே தொடர்ந்து கற்கிறார். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத எத்தனையோ மாணவர்கள் இன்று உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை ஊக்குவித்து, சித்தியடையாத மாணவர்களை ஊக்குவித்து கல்வியில் உயர்ச்சிக்கு வழிசெய்யவேண்டும். -என்றார். (207)

## நிழல் தரு மரங்கள் நடப்பட்டன

கோப்பாய்,நவ.19

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தில் சுகவாழ்வு நிலையத்தினால் நிழல் தரு மரங்கள் நடப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மரம் நடும் நிகழ்வில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இந்நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். (202-72)

## வடமராட்சியில் புகையிலை நாற்று விற்பனை

வடமராட்சி,நவ.19

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை நாற்று விற்பனை சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது.

ஒரு புகையிலை நாற்று இரண்டு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

புகையிலைச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் புகையிலை நாற்று மேடைகள் அமைத்தோரிடம் தமக்குத் தேவையான புகையிலை நாற்றுக்களைப் பெற்றுப் புகையிலை நடுகையை மேற்கொண்டுள்ளனர். (202-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த 'பெலிக்கன்' என்ற அரிய வகையைச் சேர்ந்த இந்தப் பறவை 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் பிடிபட்டதும், பறக்க விடப்பட்ட பின்னரும் அது தன்னுடைய நாட்டுக்குச் செல்லாமல் தன்னைப் பிடித்து வளர்த்தவரிடமே மீண்டும் வந்ததும் உதயன் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்!

தற்போது இந்தப் 'பெலிக்கன்' பறவையை வளர்த்து வரும் தொல்புரம் மேற்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த தங்கராசா றேகன் என்பவர் வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதால், தகுந்தவர்களிடம் இந்தப் பறவையை ஒப்படைக்கக் காத்திருக்கிறார். உலகின் அரியவகை உயிரினமொன்றை அழியவிடாது வளர்த்து வருகின்ற றேகனின் முயற்சி குறித்து எந்தவொரு அமைப்பும் அக்கறை கொள்ளாதது கவலைக்குரிய விடயமே.

நாளொன்றுக்கு இந்தப்பறவையின் உணவுக்கே ஆயிரம் ரூபாவிற்கு மேல் செலவிட வேண்டிய நிலையில், பாடசாலைகளில் பறவையைக் காட்சிப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் பணத்தையும், தன் சொந்த உழைப்பையுமே 'பெலிக்கனுக்காக' செலவிட்டுள்ளார் றேகன். இனியாவது இவரின் சுமையைக் குறைக்க - பறவையைப் பராமரிக்க - ஆர்வமுள்ளோர் முன்வருவார்களா?

# வண்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்





படத்தில் நீங்கள் காண்பது கௌதமாலாவில், திக்கல் என்ற இடத்திலுள்ள மாயன் ஆலயம். உலகிலுள்ள ஆலயங்களில் மிகப்பெரியது இதுவெனக் கருதப்படுகின்றது. புகழ்பெற்ற ஆங்கிலத் திரைப்படமான 'ஸ்ரார் வோர்ஸ்' (நட்சத்திர மோதல்) இங்குதான் படமாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே இத்தகைய பிரமாண்டமான கட்டடத்தை எழுப்பிய சிற்பிகளை நினைக்கையில் ஆச்சரியம் மேலெழுகின்றதல்லவா?

*(நன்றி : யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை)*

படத்திலிருப்பது சுமார் நூறு வருடங்களுக்கு மேற்பட்ட மண்ணாலான வீடொன்றின் முகப்புத்தோற்றமாகும். திண்ணை, திண்ணையின் நடுவிலுள்ள 'நடை' எனப்படும் நடைபாதை, உள்முற்றமென்பவற்றுடன் காட்சி தருகின்ற மேற்படி வீட்டை ஒத்த கட்டுமானங்கள் எமது பௌதீகப் பண்பாட்டினதும் - கடந்துசென்ற வாழ்க்கை முறையினதும் சுட்டியாகும். இன்று 'நடப்பு வழக்கற்றது' (Fashion) என இடித்தெறியப்படும் இவையொத்த பண்பாட்டுப் பேறுகளைப் பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் தனிநபர்களும், நிறுவனங்களும் கவனமெடுக்க வேண்டும்.

- பாலன்குட்டி.






என்னடா இது? சைக்கிளைக் காட்டுகிறாங்களே! என்று நினைக்காதீர்கள். இந்தச் சைக்கிள் சாதாரணமானதல்ல. இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்திலேயே புதிதாக வாங்கிய இங்கிலாந்துத் தயாரிப்பான றலி சைக்கிள்தான் இது. இன்றைய பெறுமதியில் ரூபா அறுபதாயிரம் (60,000) விலை கேட்கப்பட்டும் விற்கப்படாமல் உள்ளது. ''எனது ஆயுட் காலத்தில் இதனை ஒருபோதும் விற்கமாட்டேன்'' எனக் கூறுகிறார் இதன் உரிமையாளரான புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மார்க்கண்டு என்பவர். இதற்கு அக்காலத்தில் செலுத்திய விலை ரூபா 215 மட்டும் தானாம். (படமும் தகவலும்:- கலைஞன்)

சேமிப்புப் பழக்கத்துக்குப் பேர்போன யாழ்ப்பாணத்தில் பல குடும்பங்கள், முன்னரெல்லாம் தம்மிடமுள்ள பணத்தை வங்கிகளில் வைப்பிட்டுப் பாதுகாப்பதில் அதீத அக்கறை காட்டியதில்லை. தற்போதும் அவர் களில் கணிசமானோர் தமது பணத்தைத் தம்முடன் வைத்துக் கொள் வதையே விரும்புகின்றனர். அடுத்தவருக்குத் தமது கையிருப்புத் தெரியா திருக்கவும், திருடர் பயத்திலிருந்து விடுபடவும் தமது நகை நட்டுக்களையும் பணத்தையும் தம் வீட்டு வளவில் புதைத்து வைத்துப் பாதுகாத்த குடும்பங்கள் பற்றி நிறையவே கேள்விப்பட்டுள்ளோம்.

அதிலும் ஒரு அசௌகரியம்;

நிலத்தடியில் புதைத்து வைக்கும் பணநோட்டுக்கள் காலப்போக்கில் இயற்கைப் பாதிப்பால் பழுதடையவும் வாய்ப்பிருந்தது.

தற்போது அரசு புதிதாக வெளியிட்டுள்ள ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட நாணயக்குற்றியே படத்தில் காணப்படுகின்றது.

ஒருலட்சமல்ல, பத்து லட்சம் என்ற பெரிய தொகைகளானாலும் கூட ஒரு வெற்று ரின்னுக்குள் வைத்து வீட்டுவளவில் குறிப்பிட்டதொரு இடத்தில் இரகசியமாகப் புதைத்து வைத்தாலும் காற்று, வெயில் மழை என்ற இயற் கைப் பாதிப்பேதுமில்லாது நீண்ட நாள்கள் ஆயிரம் ரூபா நாணயக் குற்றிகளைப் பாதுகாக்க இயலும். இதனால் ஒரு வகையில் இன்றைய யாழ்ப்பாண வாழ்க்கையில் திருடர்களின் பயமின்றி நிம்மதியாகத் தூங்கியெழ வாய்ப்புக் கிட்டியுள்ளதாகக் கொள்ளலாமல்லவா?

- தகவல்-சந்ரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடைக்கால அதிசயங்களில் மூத்தவன்

பி.கேசவன்,
கொக்குவில்.

**பண்டைய** உலக அதிசயங்களில் மூத்தது எகிப்திய பிரமிட்டுகள் என்றால், இடைக்கால அதிசயங்களில் 'மூத்தவன் நான்தான்' என மார்தட்டக் கூடிய பெருமை உடையது சீனப் பெருஞ்சுவர்.
சும்மாவா, 2200 ஆண்டு கால சரித்திரம் கொண்டதல்லவா இந்தச்சுவர்?
சீனப் பெருஞ்சுவருக்கு இன்னொரு தனிச்சிறப்பும் உண்டு.

நிலவில் கால்வைத்த முதல் மனிதன் அங்கிருந்து பார்த்தபோது, பூமியில் மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்பு என அடையாளம் காண முடிந்த ஒரே 'நிஜ அதிசயம்' இதுவே என்பதுதான்.
சுமார் 4200 மைல் கூடுதலான நீளம்.
ஆனால் இந்தச்சுவர் ஒரே நேர்கோடாய் இல்லாமல் அங்கங்கே வளைந்து, நெளிந்து, சுருண்டு, பள்ளத்தில் வீழ்ந்து, மீண்டும் சில இடங்களில் மலையேறி..... என எல்லா ஜாலங்களையும் காட்டிக்கொண்டே தொடர்வதால் குறைந்த நிலப்பரப்பிலேயே அடங்கிப்போய் உள்ளது.
மற்ற எந்த அதிசயமும் போலன்றி இதைக் கட்டிமுடிக்க 1800 ஆண்டுகள் பிடித்தன என்பதே இன்னொரு கவனிக்கத்தக்க அம்சம். கி.மு.221 இல் தொடங்கிய இந்தச் சுவர்க்கட்டுமானம் கி.பி.1944வரை நீண்டதாக இந்தச்சுவர்ச் சரித்திரம் சொல்கிறது. அதாவது சீனாவை வெவ்வேறு கால கட்டங்களில் ஆண்ட மூன்று பேரரசுகளின் வாரிசுகள் பலரும் இந்தச் சுவரின் முக்கியத்துவம் அறிந்து இதில் கவனம் செலுத்தியுள்ளனர்.
காலச் சூழல் மாறியபடியே, அடுத்தடுத்த சந்ததிகளின் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சிக்கு ஏற்றபடி, இந்தச் சுவரின் பகுதிகளிலும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் எனப் பலவற்றிலும் முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.
அதுசரி..... இப்படிக் காலங்காலமாக அடுத்தடுத்து வந்த பலரும் எதற்காக இப்படி ஒரு நீளச் சுவரை எழுப்பக் கங்கணம் கட்டியது போலக் காலத்தைச் செலவிட்டார்கள் என்ற கேள்வி எழுகிறதா? இந்தச் சுவருக்கான அவசியம் அப்போது இருந்திருக்கிறதே! இன்றைய உலக மய வர்த்தகச் சூழ்நிலையில், 'வேறுவழியில்லை' எனப் புரிந்துகொண்ட சீனா, தங்களது கம்யூனிசக் கட்டுப்பாட்டுகளில் பல மாற்றங்களைச் செய்துகொண்டு, பொருளாதாரக் கொள்கை வட்டங்களை உடைத்துக் கொண்டு வெளியே வர முயன்றதும் - உலக நாடுகள், உலகச் செல்வம் என எல்லாம் அங்கே பாய்வது போலத்தான், அந்நாளிலும் ஒரு பாய்ச்சல். சீனாவை நோக்கி! ஆனால், அன்று பாய்ந்தது சீனாவின் எதிரிகள். சீனாவில் இருந்த செல்வச் செழிப்பைக் கொள்ளையடிக்க இவர்கள் வரிசையாக அடுத்தடுத்துப் பாய்ந்தவர்கள். ஓய்வின்றி எந்நாளும் இவர்களுடன் போரிட்டுக் கொண்டு, எல்லைகளைக் காத்துக்கொள்ளவே நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது என எண்ணிய அந்நாளைய சீன மன்னர்கள் எதிரிகளுக்கு 'செக்' வைக்க எண்ணி எழுப்பியதுதான் இந்தச்சுவர். ஆனால் இன்றைக்கு உலக அதிசயமாகத் திகழும் இந்தச் சுவரோ, சுற்றுலா விரும்பிகளைக் கவரும் அளவு சுவாரஸ்யமாக தகவல்களை உள்ளடக்கியதாகத் திகழ்வதுடன், உலக நாடுகள் பலவற்றிலிருந்து இந்நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணியையும் ஈட்டித்தரும் கற்பக விருட்சமாகவும் விளங்குவது கவனிக்கத்தக்கது. கிழக்கில் கொரியா நாட்டு மலைப்பகுதிகளில் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கும் இந்தச்சுவர் மேற்குத்திசை நோக்கி ஓடி......ஓய்ந்து நிற்பது கோபி பாலைவனப் பகுதிகளுக்கு முன்புதான். கி.மு.221 இல் சீனாவின் பகுதிகளை ஆண்ட.... 'க்வின்' பேரரசை உருவாக்கிய 'க்வின் ஷி ஹாங்' என்ற அரசன்தான் இந்தச்சுவர் எழுப்ப அட்சரம் போட்டாராம்.

# சட்டத்தரணிகளின் உடை

இங்கிலாந்தின் அரசியாக இருந்த இரண்டாம் மேரி 1694 ஆம் ஆண்டில் இறந்தார். அரசியின் மறைவுக்குத் துக்கம் அனுஷ்டிக்கும்போது சட்டத்தரணி கள் கறுப்பு உடை அணிந்திருக்க வேண்டும் என அரசர் மூன்றாம் வில்லியம் உத்தரவிட்டார்.

அன்று ஏற்பட்ட வழக்கம் அப்படியே நிலைத்து விட்டதாம்.

அப்பொழுது கழுத்துக்கு வெள்ளைப்பட்டி அணியும் வழக்கம் இருக்க வில்லை. பின்னர் கறுப்பு உடையிலிருந்து முகத்தைப் பளிச்சென்று எடுத்துக் காட்டுவதற்காக வெள்ளைப் பட்டியை அணியத் தொடங்கினர்.

பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த சகல நாடுகளிலும் இந்த வழக்கம் பரவலாயிற்று.

லக்சுஷ்மி, கோப்பாய்.

# சாரணியத்தின் தந்தை



சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் றொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் பிரபு ஆவார். இவர் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி இங்கிலாந்தில் பிறந்தார். படம் வரைதல், வேட்டையாடுதல், படகு ஓட்டல், தேச ஆராய்ச்சி போன்றவற்றில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்.

ஆபிரிக்காவில் இராணுவப் பணிபுரிந்த போது 1887 இல் சூலுவம்சத்தினருடனான பெரும் போரில் வெற்றிசூட்டி துயில் கொள்ளாத ஓநாய் "இம்பீசா" என்ற பட்டத்தைப் பெற்றார்.

இராணுவ அனுபவத்தைக்கொண்டு இவர் 1903 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறவுண் சீதிவில் 20 பேர் கொண்ட பாசறையை பரீட்சார்த்தமாக நடத்தி வெற்றி கொண்டமையால் சாரணியம் வளர்ச்சி அடைந்தது. 1929 இல் உலக சாரணர்களின் எண்ணிக்கை 20 லட்சத்தை அடைந்தபோது ஐந்தாம் ஜோர்ஜ் மன்னன் பேடன்பவலுக்கு "கில்வெல் பேடன் பவல் பிரபு" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தார். எல்லோரும் அன்புடன் இவரை ஆ.க என அழைப்பதுண்டு.

ரி.றதா (ஆசிரியர்)

# விழித்தூறல்

நம்பிக்கைகள்
யாவும் தகர்த்தெறியப்பட
எதிர்காலம்
இருண்ட சூனியமாய்.........

மாற்றங்கள்
ஏற்றங்கள் எதுவுமின்றி
ஏமாற்றமே
தொடர்கதையாய்..........

வெந்துபோன வாழ்வில்
புதிது புதிதாய்
வடுக்களைப் பதித்துச்
செல்கிறது
காலம்........

நிலை தடுமாறி நிற்கும்
என்னுள்
நிரந்தரமாகிவிட்டது.
விழித்தூறல்..........

ந.ராஜி
கொடிகாமம்.



# புதன் பொய்கை

# 'Money' அதன் அர்த்தம்

**பணம்** என்பதை ஆங்கிலத்தில் Money என்று அழைப்பார்கள். இந்த Money என்னும் சொல் பிரெஞ்சுச் சொல்லான Moneie என்றதில் இருந்து வந்தது. இந்தப் பிரெஞ்சுச் சொல் Moneta என்ற லத்தீன் சொல்லில் இருந்து வந்தது.

ஏன் இப்படிப் 'பணத்தைப்' பாடாய் படுத்துகின்றேன் என்று யோசிக்கின்றீர்களா? தொடர்ந்து வாசியுங்கள் புரியும்.

பழைய காலத்தில் ரோம் நகரில் இருந்த ஜூனோ மனீட்டா என்ற தேவதையின் கோயிலைத்தான் நாணயங்கள் அடிக்கும் நிலையமாகப் பயன்படுத்தி வந்தார்கள். இந்த ஜூனோ தேவதையின் கோயிலில் பல புனித வாத்துக்கள் இருந்தன.

ஒரு சமயம் ரோமாபுரியை முற்றுகையிட்ட பிரெஞ்சுவீரர்கள் இரவோடிரவாக மதில்கள் மேல் ஏறி நகருக்குள் புக முயன்றிருக்கின்றார்கள். இதை உணர்ந்து கொண்ட அந்தப் புனித வாத்துக்கள் பெரும் சத்தமிட்டு ரோமானியர்களை எழுப்பி உஷார்ப்படுத்தியுள்ளன.

இதன்மூலம் இந்தக் கோயில்Moneta என அழைக்கப்பட்டது. Moneta என்றால் 'அபாயக்குரல் கொடுப்போன்' என்று பொருள்.

இதன்மூலமே பணத்துக்கு 'Money' என்று பெயர் வந்தது.

'Money' அதிகம் வந்தாலும் வராவிட்டாலும் ஆபத்துத்தானே.

ராஜி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆள் தேவை

அனைத்து வெதுப்பக வேலைகளும் தெரிந்த வேலைஆள் உடன் தேவை. (மெசின் மற்றும் கேக்,பிஸ்கட், ஐசிங், மின்சார வெதுப்பி இயக்கக்கூடியவர்) நேரில் வருகைதரவும் - காலை 8 மணிமுதல் 11.30 மணி வரை.

**காங்கேயன் வெதுப்பகம்,**
**கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.** (79954)

## மூன்றாவது வருஷாப்திகம்

மண்ணக வாழ்வில் 20 ★ 07 ★ 1942



விண்ணுறையும் தெய்வமாய் 22 ★ 11 ★ 2005

அமரர் பிரம்மஸ்ரீ
### விஸ்வநாதக் குருக்கள் பரிபூரணானந்த சர்மா

பார்த்திபப் பேராண்டிற் பார்நடுங் குங் கார்த்திகையைச்
சார் கிருஷ்ண பட்சத்துச் சப்தமியில் - பேரார்
பரி பூரணானந்தப் பண்பான ஆசான்
அரிய சிவன் தாளடைந்தான் ஆம்.

'கணேசவாசம்',
அம்பலவாணர் வீதி, உடுவில்,சுன்னாகம். **குடும்பத்தினர்.** (வி/555353)

## குருபூசை தினம்

யாழ்ப்பாணம்,நவ.19

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குரு பூசை தினம் நாளை வியாழக்கிழமை முற் பகல் 10 மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)

## சமயதீட்சை வழங்கல்

சுழிபுரம்,நவ.19

சுழிபுரம் வடக்கு சம்புநாதர் சிவன் ஆலயத்தில் சோமவார ஐந்தாவது திங்கள் அன்று சிவத்திரு சு.சுந்தரராசக் குருக்களினால் சமய தீட்சை வழங்கப்படவுள்ளது.

அன்றைய தினம் சமயதீட்சை பெற விரும்புவோர் ஆலயக் குருக்களிடம் தங்கள் பெயரைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (204)

## இன்று சு.கட்சியின் செயற்குழுக் கூட்டம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்கள் குறித்து இந்தக் கூட்டத்தின்போது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது எனக் கட்சியின் உள்விவகாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல்களின் போது விரிவான கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட உள்ளது எனவும் கட்சியின் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார். (சி)

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.:6944 (79770)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 . 11 . 1949



இறப்பு 17 . 11 . 2000

### அமரர் சிதம்பரப்பிள்ளை செல்வரட்ணம்

எம்முடன் வாழ்ந்து வந்த காலத்தில் எல்லோருடனும் இனிமையாகவும் இன்முகத்தோடும் பழகி மகிழ்வித்த பண்பாளரே! இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. எல்லாம் நேற்று நடந்து முடிந்தது போல் உள்ளது. உறவினர்களுக்கு நல்ல உறவினராகவும், ஆசிரிய உலகுக்கு நல்லாசிரியராகவும் ஒரு முன்னோடியாக வாழ்ந்து இவ்வுலக வாழ்வை நீத்தீர். என்றும் உங்கள் நினைவுடனும் துயருடனும் வாழும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.*

ஈச்சமோட்டை,
பீச் றோட், யாழ்ப்பாணம். **மைத்துனரும், குடும்பத்தினரும்.** (49940)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா சுப்பிரமணியம்

(மண்கும்பான் 4ஆம் வட்டாரம்)

*மண்ணில்: 06.10.1932* *விண்ணில்:01.12.2007*

*திதி: ஸப்தமி (19.11.2008)*

ஓராண்டு காலம் ஓடியே மறைந்ததே!
ஒளியாகி நின்ற எங்கள் அன்னையே!
சீராண்ட உன்னைப் பிரிந்தே தவிக்கின்றோம்
சிந்தையில் என்றும் இருப்பாய் நீ அம்மா!

5/1, பண்டாரக்குளம் வீதி,
நல்லூர். (79921)

உங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

## PANDA Express UNIVERSAL COURIER

யாழ்நகரில் இருந்து சர்வதேசரீதியாக இருக்கும் உங்கள் உறவுகளிற்கு வேண்டிய ஆவணங்கள், பொதிகள் என்பவற்றை மிகக்குறைந்த கட்டணத்தில் உலகில் எந்த நாட்டிற்கும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்பிவைக்கப்படும்.

நீங்கள் குறிப்பிடும் முகவரியில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும்

Door to Door Delivery

உங்கள் பொதிகள் ஆவணங்கள் யாழ் அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

**தொடர்புகளிற்கு:**
**யாழ்பிரதான அலுவலகம்**

Computer Express
No 167, Kasthuriyar Rd,
Jaffna.
Phone : 021 222 8250

**HEAD OFFICE**
PANDA Express
No 30-1/20,
W.A.De Silva Mw
Colombo 06.
Phone : 0114594836

யாழ்ப்பாணத்தின் அனைத்துபகுதிகளிற்கும் முகவர்கள் தேவைப்படுகின்றார்கள்

## COMPUTER EXPRESS

## நெல்லியடியிலும் நாம்......

வடமராட்சி மாணவர்களின் நலன்கருதி குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையினை வழங்க எமது கிளை நிறுவனத்தினை No 07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi. இல் ஆரம்பித்துள்ளோம்

Computer Courses: 80%OFF

| | | | |
|---|---|---|---|
| DIPLOMA IN MICROSOFT OFFICE | 3Months | | 1,500 |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN WEB PAGE DESIGNING | 3Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN GRAPHIC DESIGNING | 4Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN HARDWARE ENGINEERING | 3Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN AUTO CAD | 3Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN ACCOUNTING PACKAGE | 3Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | 4Months | ~~10,750~~ | 2,150 |
| HONOURS DIP. IN COMPUTER SCIENCE | 5Months | ~~13,000~~ | 2,600 |

**HEAD OFFICE:**
No 167,
Kasthuriyar Rd,
Jaffna
Phone : 0212228250

**BRANCH OFFICE:**
No 07,
Kanpollai Lane,
Kodikamam Rd,
Nelliyadi.
Phone : 0777222422

50%OFF Advance Courses,

| | | |
|---|---|---|
| Dip. in Multimedia | ~~5500~~ | 2750 |
| Dip. in Video Editing | ~~6500~~ | 3250 |
| Dip. in Networking | ~~10000~~ | 5000 |

கம்யூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள்

நெல்லியடியில் பதிவுசெய்யும் மாணவர்களிற்கு விசேடகட்டண சலுகை வழங்கப்படும்.

யாழ்நகரில் வகுப்புக்கள் ஆரம்பம்

Batch I 22/11/2008 11AM / 02PM
Batch II 23/11/2008 11AM / 02PM
Batch III 24/11/2008 11AM
Batch IV 25/11/2008 09AM

நெல்லியடியில் வகுப்புக்கள் ஆரம்பம்

Batch I 20/11/2008
Batch II 22/11/2008
Batch III 23/11/2008
Batch IV 25/11/2008
10.00AM

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

104 வயது வரை வாழ்ந்த பெருந்தாய்

மலர்வு 17 . 07 . 1902



குவிவு 22 . 11 . 2005

### திருமதி சுவாமிநாதர் வள்ளியம்மைப்பிள்ளை

*திதி: ஸப்தமி (19.11.2008)*

*முந்நூறு நாள்கள் கருவறையில்*
*மூச்சூட்டிக் காத்தெம்மை*
*உலகம் காட்டிய உத்தமியே!*
*நீ பெற்றுக் கொடுத்தபோது*
*தத்தெடுத்த தாய் மண்ணே!*
*உமக்கு எம் கவி சமர்ப்பணம்*
*அன்னையே உன்னையும்*
*எம் மண்ணையும் எம் இரு*
*கண்களாய் இமைக்குள் வைத்து நேசிப்போம்.*

முதலியார் வளவு,
கோப்பாய். (79905)

**பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்,**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 வயதுப் பிரிவுக்கான உதைபந்தாட்டம்: அராலி இந்து அணி வலயச் சம்பியனாகியது

## ஏழாலை ஸ்ரீ முருகன் – 2ஆம் இடம், மானிப்பாய் இந்து – 3ஆம் இடம்



வலி.வடக்கு,நவ.19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் அராலி இந்துக் கல்லூரி சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், அராலி இந்துக் கல்லூரியும், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் மைதானத்தில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது. எனினும் அந்த அணியின் முன்னணி வீரர்கள் கிடைத்த வாய்ப்புக்களை உரிய முறையில் பயன்படுத்தத் தவறியமையால் கோல் பெறும் வாய்ப்புக்களை இழந்தனர்.

அராலி இந்துக் கல்லூரி அணியின் பின்கள வீரர்கள் விறுவிறுப்பாக ஆடி பந்தை மைதானத்தின் நடுப்பகுதிக்குச் செலுத்தினார்கள். முதல் பாதி ஆட்டம் கோல்கள் பெறாத நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டன. இரு அணி வீரர்களும் ஆக்ரோஷமாக ஆடத் தொடங்கினார்கள்.

போட்டி முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதனைச் சரியாகப் பயன்படுத்திய அராலி இந்துக் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணியை வென்று சம்பியனாகியது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற கோல்கணக்கில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

(50-86)

## சென்.ஜோன்ஸ் 'பி' அணியை வென்றது நெல்லியடி ம.ம.வி.

13 வயதினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்.ஜோன்ஸ் 'பி' அணியுடனான போட்டியில் தனுசனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நெல்லியடி ம.ம.வி. வெற்றியீட்டியது.

நெல்லியடி ம.ம.வி. மற்றும் சென். ஜோன்ஸ் 'பி' அணிகளுக்கிடையிலான போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ம.ம.வி.அணி, தனுசன் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்ட 53 ஓட்டங்களுடனும், கோகுலராஜ் பெற்றுக்கொண்ட 30 ஓட்டங்களுடனும் 164 ஓட்டங்களை 6 விக்கெட்டுகள் இழப்பிற்குப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணிவீரர் மேஷக் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

தமது முதல் இன்னிங்ஸிற்காகத் துடுப்பாடிய சென்.ஜோன்ஸ் 'பி' அணியின் சார்பில் மேஷக் 17 ஓட்டங்களையும், டினோஜன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அந்த அணி சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்துவீச்சில் தனுசன் 4 விக்கெட்டுகளையும், சிந்துஜன் 3 விக்கெட்டுகளையும், சஜர்தன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக மீண்டும் துடுப்பாடிய சென்.ஜோன்ஸ் அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பந்துவீச்சில் தனுசன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (50)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# வடமாகாணச் சம்பியன்



யாழ்ப்பாணம்,நவ.19

வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி வட மாகாணச் சம்பியனாகியது.

சம்பியனாகிய யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட அணியை மேலுள்ள படத்தில் காணலாம். (50-86)

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்திய கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வி. அணி சம்பியனாகியது. சம்பியன் அணி வீராங்கனைகளைப் படத்தில் காணலாம்.
*(50-86)*



# 'சிங்கிதி' கிண்ணத்தை வென்றது நெல்லியடி ம.ம.வித்தியாலயம்

ஹற்றன் நஷனல் வங்கியினால் வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட 'சிங்கிதி' கிண்ணத்திற்கான துடுப்பாட்டப் போட்டியில் நெல்லியடி ம.ம.வித்தியாலய அணி வெற்றியீட்டியது.

தாம் சந்தித்த அனைத்துப் போட்டிகளிலும் இலகுவாக வெற்றியீட்டிய நெல்லியடி ம.ம.வி. அணி இறுதியாட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற விக்னேஸ்வராக் கல்லூரி அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி ம.ம.வி. அணி, 5 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 45 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வராக் கல்லூரி அணி, உமைசுதன், டினாளன், தர்சன், அரிஹரன் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சில் 22 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. 23 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நெல்லியடி ம.ம.வி. அணி கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

இந்த் இறுதிப்போட்டியின் பரிசளிப்பு விழா , வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் ப.சங்கர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நெல் லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ.சேதுராஜா வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (50)

# பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்ற குழுநிலை விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள்

வலி.வடக்கு,நவ.19

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற குழுநிலைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**கபடி (ஆண்கள்)**

பருத்தித்துறை பிரதேச செயலகம் (முதலாம் இடம்), தெல்லிப்பழை பிரதேச செயலகம் (2ஆம் இடம்).

**கபடி (பெண்கள்)**

தெல்லிப்பழை பிரதேச செயலகம் (முதலாம் இடம்), பருத்தித்துறை பிரதேச செயலகம் (2 ஆம் இடம்).

**கரப்பந்து (ஆண்கள்)**

கோப்பாய் பிரதேச செயலகம் (முதலாம் இடம்), தெல்லிப்பழை பிரதேச செயலகம் (2 ஆம் இடம்).

**கரப்பந்து (பெண்கள்)**

சங்கானை பிரதேச செயலகம் (முதலாம் இடம்), தெல்லிப்பழை பிரதேச செயலகம்(2 ஆம் இடம்).

**உதைபந்து (ஆண்கள்)**

உடுவில் பிரதேச செயலகம் (முதலாம் இடம்), கோப்பாய் பிரதேச செயலகம் (2ஆம் இடம்).

**உதைபந்து (பெண்கள்)**

கரவெட்டி பிரதேச செயலகம் (முதலாம் இடம்), யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் (2 ஆம் இடம்).

**துடுப்பாட்டம் (ஆண்கள்)**

தெல்லிப்பழை பிரதேச செயலகம் (முதலாம் இடம்), கரவெட்டி பிரதேச செயலகம் (2 ஆம் இடம்).

**துடுப்பாட்டம் (பெண்கள்)**

சங்கானை பிரதேச செயலகம் (முதலாம் இடம்), பருத்தித்துறை பிரதேச செயலகம் (2ஆம் இடம்).

**எல்லே (ஆண்கள்)**

கோப்பாய் பிரதேச செயலகம் (முதலாம் இடம்), கரவெட்டி பிரதேச செயலகம் (2 ஆம் இடம்).

**எல்லே (பெண்கள்)**

பருத்தித்துறை பிரதேச செயலகம் (முதலாம் இடம்), மருதங்கணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு (2ஆம் இடம்).

**வலைப்பந்து**

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் (முதலாம் இடம்), உடுவில் பிரதேச செயலகம் (2 ஆம் இடம்)

(50-86)





இலங்கை வங்கி சுன்னாகம் மேற்றரக் கிளையின், உரும்பிராய் கிழக்கு இலங்கை வங்கிக் கிராமத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும், விளையாட்டுப் போட்டியும் அண்மையில் உரும்பிராயில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கிக் கொடியை வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.சிவரட்ணமும், காந்திஜி, புனித மைக்கல், பாரதிதாசன் சனசமூக நிலையங்களின் கொடிகளை அந்தந்த நிலையத் தலைவர்களும் ஏற்றி வைப்பதை முதலாவது படத்திலும் கயிறு இழு[illegible] ...த்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முல்லை/புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலையில்
கல்வி கற்கும் மாணவியான

### செல்வி பி.பகிரதா

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமைக்காகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சிவபூதராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

பா.சிவகுமார் - *பெரியப்பா*,
பெரியம்மா, சகோதரர்கள்.

(சி/555368)

---

## Video Editing Software CD க்கள் விற்பனைக்கு.

நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சகல விதமான Video Editing Software CD க்களும் எம்மிடம் உள்ளன. இத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

PC PARADISE
61,Clock Tower road
Jaffna.
T.P 021 222 9579

---

## சங்கானையில் நடமாடும் சேவையில் 104 பேர் பயன்பெற்றனர்

சங்கானை, நவ.19

சங்கானையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற காலங் கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு நடமாடும் சேவையில் 104 பயனாளிகள் உடனடியாகவே பதிவுகளை மேற்கொண்டு பத்திரங்களைப் பெற்றுள்ளனர்.

84 பேர் பிறப்புச் சான்றிதழையும், 18 பேர் விவாகப் பதிவுச் சான்றிதழையும், 04 பேர் இறப்புப்பதிவுப் பத்திரத்தையும் பெற்றுள்ளனர்.

(202)

---

## கண்ணீர்க் காணிக்கைகள்

எமது தொழிற்சங்கத்தின செயலாளர்
திரு.சங்கரப்பிள்ளை சந்திரசூடி அவர்களின் அன்புத் தாய்

### சங்கரப்பிள்ளை நாகரத்தினம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்குகொண்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள்
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் ப.நோ.கூ.சங்கம்
*நீர்வேலி.* (சி/555363)

---

## அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் - 2009 ஆம் ஆண்டிற்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் ஆகியவற்றிற்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடிந்தல்

மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கான கேள்விப்படிவம் வழங்கும்கால எல்லைகீழ்க் குறிப்பிடப்பட்டவாறுநீடிக்கப்பட்டுள்ளது.

1.கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 24.11.2008, பி.ப.2 மணிவரை
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல்: 25.11.2008, நண்பகல் 12 மணிவரை
3.கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் : 25.11.2008 பி.ப.2மணிக்கு

குத்தகை சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம்.
17.11.2008

திருமதி ச.சொக்கலிங்கம்,
*செயலாளர்,*
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
*சுன்னாகம்.*

(சி/555372)

---

## *சாவகச்சேரி பிரதேசசபை*

### 01.01.2009 முதல் 31.12.2009 வரை

சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல்

1.கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 27.11.2008, 12 மணி
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி : 28.11.2008, 12 மணி
3.கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 28.11.2008, 1 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வற்வரி தவிர) | கேள்விப் பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி தவிர) |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச் சந்தை (தேங்காய்ச் சந்தை உட்பட) | 2,500.000/- | 5,000/- | 500/- |
| 2 | கொடிகாமம் மீன்சந்தை (கோழிச்சந்தை உட்பட) | 209,500/- | 1,000/- | 200/- |
| 3 | கொடிகாமம் மத்திய சந்தையிலுள்ள வண்டி, வாகனப் பாதுகாப்பு நிலையம் (கிழக்கு, மேற்கு இருவாயில்கள்) | 200,000/- | 1,000/- | 200/- |
| 4 | கொடிகாமம் கோழி இறைச்சிக்கடை | 10,000/- | 200/- | 200/- |
| 5 | கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 40,000/- | 800/- | 200/- |
| 6 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 13,900/- | 300/- | 200/- |
| 7 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 13,900/- | 300/- | 200/- |
| 8 | வரணிச்சந்தை | 85,000/- | 1,000/- | 200/- |
| 9 | வரணிச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 10,000/- | 200/- | 200/- |
| 10 | வரணி இயற்றாலைச் சந்தை | 1,260/- | 200/- | 200/- |
| 11 | கைதடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 80,000/- | 1,000/- | 200/- |
| 12 | கைதடிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 32,700/- | 700/- | 200/- |
| 13 | கைதடிச் சந்தை | 26,800/- | 1,000/- | 200/- |

நிபந்தனைகள்

1. இறைச்சிக் கடைகளுக்குச் சபையால் விதிக்கப்படும் மாத வாடகைக் கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
2. கேள்வித் தொகை, படிவக்கட்டணம், மாதவாடகை என்பனவற்றுடன் 15% வற்வரியும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
3. வண்டி பாதுகாப்பு நிலையத்தில் துவிச்சக்கர வண்டி ரூபா 2.00, மோட்டார் சைக்கிள் - ரூபா 5.00, மோட்டார் வாகனம் - ரூபா 10.00 என்ற விகிதக் கட்டணம் அறவிடற்பாலது.
4. சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு எந்த வரி அறவீடுகளும் மேற்கொள்ளக் கூடாது.
5. கால்நடைகள் கைதடிக் கொல்களத்தில் வெட்டப்பட்டு சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் இறைச்சிக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாகப் பிரித்து மாதக் கட்டணமாக அடுத்த 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
7. கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியைச் செயலாளர்,சாவகச்சேரிப் பிரதேச்சபை, கொடிகாமம் என்ற விலாசத்திற்கும் மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரடியாகவோ, தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
8. கேள்விகளைத் தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
9. மேலதிக விவரங்களைப் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

*சாவகச்சேரி பிரதேசசபை,*
*கொடிகாமம்.*
17.11.2008

வேலுப்பிள்ளை [illegible]
செயலாளர்.

---

## மரண அறிவித்தல்கள்

### கதிர்காமு தம்பிராசா



அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு தம்பிராசா (16.11.2008) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் அமரர்களாகிய கதிர்காமு - பொன்னம்மா தம்பதியரின் மகனும் சிதம்பரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் ஜெயச்சந்திரன் (ஆய்வுகூடம் - யாழ். போதனா வைத்தியசாலை), ஜெகதீஸ்வரன் (கனடா), பாமினி (கனடா), ஜெயாபரன் (கனடா), ஜெயகாந்தன் (மல்லாவி), மகிழினி (ஆசிரியை - மல்லாவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாக்கியம் (கோப்பாய்), திலகவதி (கனடா), பூலோகநாதன் (கனடா), விஜயராணி (கனடா), ஸ்ரீரங்கன் (ஆசிரியர் - மல்லாவி), ஆகியோரின் மாமனும் கந்தசாமி (மருந்துக் கலவையாளர்), ராசம்மா, நடராசா (மருந்துக் கலவையாளர்), பாலசுப்பிரமணியம் (மேற்பார்வையாளர் - வைத்தியசாலை), பாலகிருஷ்ணபிள்ளை (முகாமைத்துவ உதவியாளர் - கரவெட்டி) ஆகியோரின் சகோதரனும் அபிரா, மனோஜன், கானுஜன் (கோப்பாய்), அபிலாஷ், அபினேஷ், சபிதா, எனா, அபிசன், அபினா, கானுஜா (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (17.11.2008) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வராம்பற்றை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.* (79962) தகவல்: ஜெயச்சந்திரன் *(மகன்).*

### மரியான் மார்க்கு



ஊர்காவற்றுறை முகாம் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியான் மார்க்கு நேற்று (18.11.2008) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியான் - சவிரியாச்சி தம்பதியரின் ஏக புத்திரனும் மரியம்மாவின் கணவரும் சூசையம்மா, காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் கிளாறா, எலிசபெத்தம்மா, மலர், கில்டா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.11.2008) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முகாம் வீதி,*
*ஊர்காவற்றுறை.* (79961)

தகவல்:
அல்பிரட் எமில் *(மருமகன்).*

### திருநாவுக்கரசு வரதராசா

[தர்மகர்த்தா - கல்கமுவ அரசன்குளம் பிள்ளையார் தேவஸ்தானம், முன்னாள் சாரதி - அளவெட்டி கணேசரட்ணம் அன் பிறதர்ஸ் நிறுவனம், இ.போ.ச.]



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கை வதிவிடமாகவும் தற்போது கல்கமுவவில் வசித்தவருமான திருநாவுக்கரசு, வரதராசா 16.11.2008 ஞாயிற்றுக்கிழமை கல்கமுவவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு நாவுக்கரசு (மல்லாகம் - சிகரம்) - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான அளவெட்டி சதாசிவம் - திரவியம் தம்பதியரின் மூத்த மருமகனும் நகுலாம்பிகாதேவியின் அன்புக் கணவரும் ச.சறோஜினிதேவி, க.சரஸ்வதிதேவி, யோ.இலட்சுமிதேவி, தேவராசா (கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களம், வட்டுக்கோட்டை), ப.மகாதேவி, காலஞ்சென்ற சிவராசா (இ.மி.ச), மற்றும் தவராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கல்கமுவவில் 22.11.2008 சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கல்கமுவ.*
*தொலைபேசி:*
*037 2253385* (79964)

தகவல்:
டாக்டர் திருமதி ச.கிருஷ்ணராசா *(சுன்னாகம்),*
திருமதி லலிதாம்பிகை லோகாதரன் *(அளவெட்டி),*
திருமதி நவமணி வாதவூரர் *(சிறியதாய்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை யாரும் அழிக்க முடியாது ஆவேசமாக முழங்குகிறார் வைகோ

## ரஷ்யா மீதான ஹிட்லரின் போரை ஒப்பிட்டு விளக்கம்



கடலூர், நவ. 18

தென்றலையும் புயலாக மாற்றும் ஆற்றல் கொண்ட விடுதலைப் புலி வேங்கைகளை யாரும் அழிக்க முடியாது. அவர்களைப் போரில் வெல்ல முடியாது. அவர்கள் புயலாக மாறி சிங்களப் படைகளுக்கு விரைவில் கல்லறை கட்டுவார்கள்.

ஹிட்லர், ரஷ்யா மீது படையெடுத்தபோது முதலில் வெற்றி பெற்றார். பனிக்காலம் வந்ததும் ரஷ்யப் படைகள், ஹிட்லரது படைகளைத் தோற்கடித்தன. அதேபோல், மழைக்காலம் முடிந்ததும் சிங்களப் படைகளுக்கு விடுதலைப்புலிகள் கல்லறை கட்டுவார்கள்.

- இவ்வாறு தமிழகத்தின் பழுத்த மூத்த அரசியல் வாதியும், ஈழத் தமிழர் ஆதரவாளரும், ம.தி.மு.க. பொதுச் செயலருமான வைகோ முழக்கமிட்டுள்ளார்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக மக்களுக்கு மட்டுமன்றி, இந்தியாவின் 100 கோடி மக்களுக்கும் துரோகம் செய்கிறது மத்திய அரசு.

கடலூரில் நேற்றுமுன்தினம் நடந்த திருமண விழாவொன்றில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு-

இலங்கை இராணுவத்துக்கு உதவ மாட்டோம் என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். ஆனால் இந்தியா இராணுவப் பொறியாளர்களை அனுப்பி, இலங்கையில் சிதைந்து கிடந்த விமான தளத்தைப் பழுதுபார்த்துப் பராமரித்து, ஈழத் தமிழர்கள் மீது குண்டுவீச வசதி செய்து கொடுத்திருக்கிறது.

இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என்று தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ டில்லி வந்து, திமிருடன் பேசிச் சென்றிருக்கிறார்.

அணு ஆயுத வல்லரசு என்று நிரூபிக்கப்பட்ட நாடு இந்தியா. எந்த நாட்டு ஜனாதிபதியும் இங்கு வந்தால் தன்னடக்கத்துடன் நடந்து கொள்வர்.

இலங்கைப் பிரச்சினையில் உண்மையான உணர்வைப் பிரதிபலிக்கத் தவறிவிட்டார் கருணாநிதி. மத்திய அரசு துரோகம் செய்துவிட்டது.

தமிழ் ஈழம் அமைந்தால் அது இந்தியாவுக்கு பாதுகாப்பு அரணாகத்தான் இருக்கும். இலங்கை அரசுக்கு எதிராக தமிழக மக்கள் தெரிவித்த எதிர்ப்பை கருணாநிதி திசை திருப்பி விட்டார். குண்டுமழை பொழிந்து கொண்டு இருக்கும் போது, நிவாரணப் பொருள்களை எப்படி அனுப்பலாம்?

புலிகளை யாரும் அழிக்க முடியாது. ஹிட்லர் ரஷ்யா மீது படையெடுத்தபோது முதலில் வெற்றி பெற்றார். பனிக் காலம் வந்ததும், ரஷ்யப் படைகள், ஹிட்லரது படைகளைத் தோற்கடித்தன.

அதேபோல் தற்போது இலங்கையில் மழைக்காலம். தமிழ் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மழைக்காலம் முடிந்ததும் சிங்களப் படைகளுக்கு கல்லறை கட்டுவார்கள் விடுதலைப்புலிகள் - என்றார்.



உண்ணாவிரதப் போராட்டம் நடத்த அனுமதி கேட்டு, பொலிஸ் கமிஷனர் அலுவலகத்தில் மனுக் கொடுக்க வந்த அரவாணிகள்.

# போரை நிறுத்த வலியுறுத்தி வரும் 8ஆம் திகதி உண்ணாவிரதக் களம் காணும் அரவாணிகள்!

சென்னை, நவ.19

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கும் போரை நிறுத்தக் கோரி அரவாணிகள் கூட்டமைப்பினர் வரும் 8ஆம் திகதி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளனர்.

அரவாணிகள் கூட்டமைப்பின் சார்பில், கல்கி, பிரியாபாபு ஆகியோர் நேற்றுமுன்தினம் பொலிஸ் கமிஷனர் அலுவலகம் வந்தனர். உளவுத்துறை கூடுதல் துணை கமிஷனர் இளங்கோவைச் சந்தித்து, டிசெம்பர் 8ஆம் திகதி சென்னை சேப்பாக்கத்தில் உண்ணாவிரதம் இருப்பதற்கு அனுமதி கேட்டு கடிதம் கொடுத்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் அவர்கள் கூறியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினையில் மற்றவர்கள் போராடுவதைவிட நாங்கள் போராடினால், எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும். எங்களது போராட்டத்துக்கு பல்வேறு தலைவர்களும் ஆதரவு தெரிவிப்பார்கள். இதுதொடர்பாக பலரையும் நாங்கள் சந்தித்து ஆதரவு கேட்கவுள்ளோம் - என்றனர்.

# ஈழத் தமிழர் துயர் பகிர்வதற்காக ரஜினியின் பிறந்தநாளும் ரத்து!

சென்னை, நவ. 19

இலங்கையில் நடைபெற்றுவரும் ஈழத் தமிழருக்கு எதிரான போரைத் தொடர்ந்து இந்த ஆண்டு தனது பிறந்தநாள் கொண்டாட்டங்களை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ரத்துச் செய்துள்ளார் - என்று மன்ற நிர்வாகி சுதாகர் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 12ஆம் திகதி ரஜினியின் பிறந்தநாளை அவரது ரசிகர்கள் கோலாகலமாக கொண்டாடுவார்கள். ரத்த தானம், கண்தானம், அன்னதானம், தங்கத் தேர் இழுத்தல், பூச்சட்டி ஏந்துதல் என தங்களுக்குத் தெரிந்த முறைகளில் ரஜினி பிறந்தநாளை அவரது ரசிகர்கள் விமரிசையாக கொண்டாடுவர்.

ஆனால் இம்முறை இந்த கொண்டாட்டங்களுக்கு சூப்பர் ஸ்டார் ரஜினி தடைவிதித்துள்ளார்.

இதுகுறித்து ரஜினி ரசிகர்கள் மன்றத்தின் நிர்வாகியும், ரஜினியின் நெருங்கி நண்பருமான சுதாகர் கூறியவை வருமாறு-

ரஜினிகாந்தின் பிறந்தநாள் அடுத்த மாதம் 12ஆம் திகதி வருகிறது. இந்த ஆண்டு பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டும் என்று ரசிகர்கள் விருப்பம் தெரிவித்தனர்.



ஆனால் ஈழத் தமிழர்கள் துன்பப்படும் வேளையில் பிறந்தநாள் கொண்டாடுவதைத் தவிர்க்கும்படி ரஜினிகாந்த் கூறியிருக்கிறார். இதுபற்றிய முறையான அறிக்கை அவரே நேரடியாக வழங்க இருக்கிறார்.

இதனை ரசிகர்கள் புரிந்துகொண்டு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக சமீபத்தில் நடிகர் கமலஹாசன் தன்னுடைய பிறந்தநாளை கொண்டாட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈழத் தமிழரின் படுகொலையைக் கண்டித்து தொழில்நுட்பத் துறையினர் மனிதச்சங்கிலி

## தொடக்கி வைத்தனர் நடிகர் சூர்யா, கார்த்திக்

சென்னை, நவ.19

ஈழத் தமிழர்களைக் படுகொலை செய்து வரும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்தக் கோரியும், போரை நிறுத்தக் கோரியும் தமிழகத்திலுள்ள தகவல் தொழில்நுட்பப் பொறியியலாளர்களும் மாணவர்களும் இணைந்து நேற்றுமுன்தினம் மனிதச்சங்கிலிப் போராட்டம் நடத்தினர்.

இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீது நடத்தப்பட்டு வரும் கண்மூடித்தனமான தொடர் தாக்குதலைக் கண்டித்து அரசியல் கட்சியினர், நடிகர் - நடிகைகள், சின்னத்திரை கலைஞர்கள், கல்லூரி மாணவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், மனிதச் சங்கிலி நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், தகவல் தொழில்நுட்பப் பொறியியலாளர்களும், மாணவர்களும் இணைந்து இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து சென்னையில் நேற்றுமுன்தினம் மனிதச்சங்கிலி நடத்தினர்.



நடிகர் சூர்யா, அவரது சகோதரர் நடிகர் கார்த்திக் ஆகியோர் இந்த மனிதச்சங்கிலியை தொடக்கி வைத்தனர். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்திய அரசு இலங்கைக்கு அளித்து வரும் இராணுவ உதவிகளை உடனடியாக நிறுத்த வேண்டும், போர் நிறுத்தம் ஏற்பட இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று அவர்கள் கோஷமிட்டனர்.

# நள்ளிரவில் விசாரணைக்காக இராணுவத்தால் கூட்டிச் செல்லப்படுவோர் வீடு திரும்புவதில்லை

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு

இராமேஸ்வரம், நவ. 19

படகு பழுதானதால் நடுக்கடலில் தவித்த இலங்கை அகதிகள் 18 பேர் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் வந்தனர்.

இலங்கையில் வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த இவர்கள் கடந்த 15 ஆம் திகதி இரவில் பேசாலைக் கடற்கரையிலிருந்து படகில் புறப்பட்டனர். வழியில் படகின் இயந்திரம் பழுதாகி நின்றது. இரவில் கடலில் தவித்த அகதிகள் இயந்திரத்தைச் சரி செய்து மறுநாள் (நவ. 16) மதியம் இலங்கைக் கடல் பகுதி 6 ஆவது மணல்திட்டில் ஒதுங்கினர். பெற்றோல் இல்லாமல் கடல் நீரோட்டத்தில் 4 ஆவது மணல் திட்டுக்கு படகு வந்தது. நள்ளிரவில் வந்த இலங்கைப் படகில் பெற்றோல் வாங்கி நேற்றுமுன்தினம் அதிகாலையில் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரை வந்தனர். பொலிஸார் விசாரணை செய்து மண்டபம் முகாம் அனுப்பி வைத்தனர்.



இவர்களில் வவுனியாவைச் சேர்ந்த ரொபர்ட் (வயது - 30) கூறுகையில்-

நள்ளிரவில் விசாரணைக்காக இராணுவத்தால் அழைத்துச் செல்லப்படும் ஆண்கள் வீடு திரும்புவதில்லை. பகலில் வான்களில் வருவோரும் இளைஞர்களைக் கடத்தி செல்கின்றனர். உடல் நலம் பாதித்தால் கூட சிகிச்சை பெறமுடியவில்லை. வேலையும் கிடைக்காததால் அகதியாக இங்கே வந்தோம் - என்றார்.

# கச்சதீவுக் கடலருகே 26 தமிழக மீனவர் இலங்கைக் கடற்படையால் சிறைபிடிப்பு

சென்னை, நவ. 19

கச்சதீவு அருகே நடுகடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாம் பட்டினத்தைச் சேர்ந்த 26 மீனவர்களை இலங்கைக் கடற்படை சிறை பிடித்துச் சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாம்பட்டினத்தைச் சேர்ந்த 26 மீனவர்கள் 7 படகுகளில் நேற்றுமுன்தினம் காலை மீன்பிடிக்க சென்றனர். அவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இந்திய எல்லையைத் தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்துள்ளனர் எனக் கூறி அவர்கள் அனைவரையும் சிறைப் பிடித்துச் சென்றது எனக் கூறப்படுகிறது. அவர்களின் படகுகளை இலங்கைக் கடற்படை இழுத்து சென்றது எனவும், அவர்கள் பிடித்திருந்த மீன்களைப் பறித்துக் கொண்டது எனவும் கூறப்படுகிறது.

இதனிடையே, மீன்பிடிக்க சென்ற 26 மீனவர்களும் கரை திரும்பாததால் ஜெகதாம் பட்டினத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் கதி என்ன என்று உறவினர்கள் கலங்கத் தொடங்கினர். இதனால் அங்கு பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டது.

பிறகுதான் அவர்கள் அனைவரும் இலங்கைக் கடற்படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டிருப்பது தெரிய வந்தது. அவர்களை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெகதாம் பட்டினம் பகுதி மீனவர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிக்கலில் 'ஸ்டார்' படங்கள்

பண நெருக்கடியால் கமல்ஹாசனின் 'மர்மயோகி' படப்பிடிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று ரஜினிகாந்தின் 'எந்திரன்' படத்துக்கும் பண நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் அந்தப் படத் தயாரிப்பு நிறுவனம், படத்திலிருந்து விலகிக்கொள்ள முடிவுசெய்துள்ளது என்று சினிமா வட்டாரத்தில் பேசப்படுகிறது.

ரஜினிக்கு சுமார் ரூ.25 கோடி, இயக்குநர் ஷங்கருக்குசுமார் ரூ.8 கோடி, ஐஸ்வர்யாராய்க்கு சுமார் ரூ.8 கோடி, ஏ.ஆர்.ரஹ்மானுக்கு சுமார் ரூ.8 கோடி என படத்தின் முக்கிய புள்ளிகளின் சம்பளமே ரூ.50 கோடியைத் தொடுகிறது.

படத்தின் பெரும்பாலான காட்சிகள் வெளிநாடுகளில் படமாக்கப்படுவதால் படத்தின் பட்ஜெட் சுமார் ரூ.130 கோடியைத் தாண்டி விடும்; படம் சூப்பர் ஹிட் ஆனால் மட்டுமே போட்ட பணத்தை எடுக்க முடியும் என யோசித்த அந்தத் தயாரிப்பு நிறுவனம் படத்திலிருந்து விலகிக்கொள்ள முடிவுசெய்துள்ளதாம். இதையடுத்து, சூப்பர் ஸ்டார் தலைமையில் [illegible] வருகிறது எனக் [illegible]



# 25ஆம் திகதி முழு அடைப்பு முடிவை மறுபரிசீலிக்கக் கோருகிறது பா.ம.க.

சென்னை, நவ.19

இலங்கையில் போரை நிறுத்தக் கோரி தா.பாண்டியன் தலைமையில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முழு அடைப்பு முடிவை மறுபரிசீலனைசெய்ய வேண்டும்.

- இவ்வாறு பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கையில் போரை நிறுத்த வேண்டும் என்று [illegible] சென்னையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்தது. இதில் நான் கலந்து கொண்டு, கருத்துக்களை வலியுறுத்தினேன்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி, மீண்டும் ஒரு முறை முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்த வேண்டும். இந்தப் பிரச்சினையில் ஐ.நா.குழுவின் உதவியை தேவைப்பட்டால் மத்திய அரசு நாட வேண்டும் அதன் பொருட்டு

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவான, தமிழகத்தில் 25ஆம் திகதி முழு அடைப்பு என்பதை மறுபரிசிலனை செய்ய வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். எல்லைப்புற ஏவுகணைத் தாக்குதல்களுக்கு ஒபாமாவின் பதவி ஏற்புக்குப் பின்னர் தீர்வு வரும்

## ஜனாதிபதி அலி சர்தாரி நம்பிக்கை



இஸ்லாமாபாத், நவ.19

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா பதவியேற்றதும் பாகிஸ்தானில் நடத்தப்படும் ஏவுகணைத் தாக்குதல் பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஏற்படும் என நம்பிக்கை உள்ளது என பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளவை வருமாறு:-

பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையை ஒட்டிப் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் தலிபான் மற்றும் அல்-குவைதா பயங்கரவாதிகள் மறைந்துள்ளனர். அவர்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில், பயங்கரவாதிகளுக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறி, அமெரிக்கப் படையினரும் அடிக்கடி இந்தப் பகுதிகளில் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் அப்பாவி மக்களும் உயிரிழக்கின்றனர்.

அமெரிக்க படையினரின் இந்த நடவடிக்கையால் பாகிஸ்தானுக்குள் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது. எங்களின் இறையாண்மை பாதிக்கப்படுகிறது.

எங்கள் நாட்டுக்குள் அமெரிக்க இராணுவம் இதுபோன்ற தாக்குதலை நடத்துவது கவலை அளிக்கிறது. இதுபற்றி பலமுறை அறிவுறுத்தியும் ஏவுகணை தாக்குதல் தொடர்கிறது. தற்போது அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒபாமா வெற்றி பெற்றுள்ளார். அவர் ஜனாதிபதியாக பதவியேற்றதும், ஏவுகணைத் தாக்குதல் தொடர்பான பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஏற்படும் என நம்பிக்கை உள்ளது. - இவ்வாறு சர்தாரி கூறியுள்ளார்.

# ஹிலாரிக்கு அமைச்சர் பதவி வழங்க செனட்டர் ஆதரவு

''அமெரிக்க வெளியுறவு அமைச்சராக ஹிலாரியை தேர்வு செய்ய ஒபாமா முடிவு செய்தால், அது சிறப்பானதாக இருக்கும்'' - என்று குடியரசு கட்சியின் செனட்டர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிக்காக்கோவில் அண்மையில் ஹிலாரியுடன் சந்தித்துப் பேசிய ஒபாமா அவருக்கு வெளியுறவு அமைச்சர் பதவி வழங்குவது குறித்து கருத்து வெளியிட்டிருந்தார். இதை ஹிலாரி ஒப்புக்கொள்ளவும் இல்லை. மறுக்கவும் இல்லை எனத் தகவல்கள் வெளியாகின என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா பதவியேற்ற பின், அவர் தேர்வு செய்யும் அமைச்சர்களுக்கு, செனட் சபை ஒப்புதல் தரவேண்டும். அதன்பிறகே அவர்கள் அமைச்சர்களாக பதவி ஏற்பர்.

நவம்பர் மாதம் நடந்த செனட் தேர்தலில், ஜனநாயக கட்சிக்கு மேலும் ஆறு செனட் உறுப்பினர்கள் கிடைத்தனர். செனட் சபையின் மொத்த உறுப்பினர்கள் 100 பேரில்,57 பேர் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர். இதனால், ஒபாமா தேர்வு செய்யும் அனைத்து அமைச்சர்களுக்கும் ஒப்புதல் கிடைத்துவிடும் எனவும் கூறப்படுகிறது.

## உலக அரங்கில்

# இந்தோனேஷிய தீவு ஒன்றில் நிலநடுக்கம் 700 வீடுகள் நாசம்

ஜகார்த்தா, நவ. 19

இந்தோனேஷியாவின் சுலாவெசி தீவில் நேற்றுமுன்தினம் இரவு 7.5 ரிச்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்கு ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தோனேஷியாவின் கடல் பகுதியில் அடிக்கடி பூகம்பம் ஏற்படுவது தற்போது வாடிக்கையான ஒரு நிகழ்வாகியுள்ளது. இங்குள்ள சுலாவெசி தீவு அருகே நேற்று முன்தினம் இரவு 7.5 ரிச்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. தொடர்ந்து ஆழிப் பேரலை ஏற்படலாம் என அமெரிக்கப் புவியியல் வல்லுநர்களும் இந்தோனேஷிய வல்லுநர்களும் எச்சரிக்கை விடுத்தனர்.

பூகம்பம் ஏற்பட்ட கொரன்டாலு நகர மக்கள் நள்ளிரவில் வீடுகளை விட்டு, வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர். இந்தத் தீவில் உள்ள பியோல் மாவட்டத்தில் 700 வீடுகள் தரைமட்டமாயின. இதில் நான்கு பேர் பலியாயினர். குவான்டாங் கிராமத்தில் வீடு இடிந்து முதியவர் ஒருவர் பலியானார். பூகம்பத்தால் பியோல் மாவட்டம் மற்றப் பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளது என சுலாவெசி கவர்னர் தெரிவித்துள்ளார்.

# ஒபாமாவின் பாட்டிக்கு சர்வதேச தூதர் பதவி

அமெரிக்க ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ள பராக் ஒபாமாவின் தந்தைவழிப் பாட்டியான மமா சாரா ஒபாமா சர்வதேச அமைப்பின் சார்பில் உலகம் முழுவதும் நடத்தப்பட்டு வரும் சத்துணவு குறைபாடு தீர்வுக்கான அமைப்பின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது 86 வயதாகும் மமா சாரா ஒபாமா, சமீபத்தில் நியமிக்கப்பட்ட ஆர்ஜென்டீனா முன்னாள் கால்பந்து நட்சத்திரம் மரடோனா உள்ளிட்ட மற்றைய தூதர்களுடன் இணைந்து செயற்படுவார்.

இவர், கென்யாவில் செயற்பட்டு வரும் கிசுமு குழந்தைகள் மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றுவார்.

இந்தக் கௌரவத்தை வரவேற்றுள்ள மமா சாரா கூறியவை வருமாறு:-

''ஆதரவற்ற குழந்தைகளுக்கும், பாதிப்புக்கு உள்ளாகும் குழந்தைகளுக்கும் நான் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறேன். இப்பணியை தொடர்ந்து முன்னெடுப்பேன்.



எனது பேர்த்தி அவுமா ஒபாமாவின் மூலம் தான், சர்வதேச அளவில் எனக்குப் பதவி அளிக்கப்பட்ட தகவல் முதலில் கிடைத்தது. எனது பேரன் ஒபாமா, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதை இன்னும் நாங்கள் கொண்டாடி வருகிறோம். மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்காக, வெகுதூரத்தில் இருந்தெல்லாம் உறவினர்கள் வந்துகொண்டிருக்கின்றனர் - என்றார்.

# முக்கிய தீவிரவாதி ஒருவர் பங்களாதேஷ் நகரில் கைது

டாக்கா, நவ. 29

பங்களாதேஷில் முக்கிய தீவிரவாதிகளில் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரிடமிருந்து 70 கிலோ எடையுள்ள வெடிபொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 'ஜமாயதுல் முஜாகிதீன் பங்களாதேஷ்' என்ற தடை செய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் சிலர் டாக்காவில் நடமாடுகின்றனர் என அந்நாட்டு அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, அதிரடிப் படையினர் டாக்கா முழுவதும் தீவிரத் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது முகமது ஹனீப் என்ற இத்தீவிரவாதி பிடிபட்டார்

அவரிடம் விசாரணை நடத்தப்பட்டதில் அவர் 'ஜமாயதுல் முஜாகிதீன்' அமைப்பைச் சேர்ந்தவர் என்பது உறுதியானது. அத்துடன் குண்டுகள் தயாரிக்கத் திட்டமிட்டே அவர் வெடிபொருள்களை கடத்தி வந்தார் என்பதும் அம்பலமானது.

அவருடன் மேலும் இரு தீவிரவாதிகள் வந்தனர் எனக் கூறப்படுகிறது. அதிரடிப் படையினரின் தேடுதல் வேட்டையை அறிந்து அவர்கள் டாக்காவில் தலைமறைவாகியுள்ளனர். எனினும், அதிரடிப் படையினர் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.



பனிக்கட்டியில் அட்டகாசமான உருவங்களை செதுக்குகிறார். ஹொலண்ட் நாட்டின் ஹெலனா ப்ராங்கர்ட், ஜேர்மனியின் பிரிமன் நகரில்தான் இந்தக் காட்சி. அங்கு பனிச் சிற்ப திருவிழா நடைபெற உள்ளது. அதில் 40க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். ஏராளமான பனிச் சிற்பங்கள் இடம்பெற உள்ளன. வரும் 22ஆம் திகதி இந்தக் கண்காட்சி தொடங்கி, ஜனவரி 25ஆம் திகதி முடிவடைகிறது.

# சிற்றி குழுமம் வங்கியில் பணியாளர்கள் குறைப்பு

வாஷிங்டன், நவ. 19

உலக அளவில் நிலவும் நிதி நெருக்கடிகள் காரணமாக அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் சிற்றி குழுமம் வங்கி மிகப் பெரிய அளவில் வேலைக் குறைப்பை அறிவித்துள்ளது.

ஏற்கனவே 23,000 பணியிடங்கள் மூடப்படும் எனவும், ஐம்பதாயிரம் பேர் வேலையிழப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனுடன் மேலும் ஐம்பதினாயிரம் வேலை இழப்புகளை சிற்றி வங்கி அறிவித்திருக்கிறது. இதன் மூலம் இந்த வங்கியின் பணியாளர்களில் 14 சதவீதம் பேரை அது குறைக்கவுள்ளது.

அமெரிக்காவின் மோசமான வீட்டு அடமான கடன்களுடன் தொடர்புடைய வராக் கடன்கள் காரணமாக கடந்த ஆண்டு சிற்றி குழுமம் வங்கி பல பில்லியன் டொலர்கள் இழப்புகளைச் சந்தித்திருந்தது.

இந்த வங்கிக் குழுமம் கடந்த பத்து ஆண்டுகளில் மிகப் பெரும் வளர்ச்சியை எட்டியது. நூறு நாடுகளுக்கும் வங்கிகளின் அனைத்து மட்டங்களிலும் இந்த பணியிழப்புகள் இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஐந்து பேருடன் ஒபாமா வெள்ளை மாளிகை வாசம்

தன் மனைவி மிச்சேல், இரு மகள்கள் உட்பட ஐந்து பேருடன் வெள்ளை மாளிகையில் பராக் ஒபாமா குடியமர்வார்.

ஆபிரிக்க அமெரிக்கரான இவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம், அமெரிக்க கொள்கை, வெளியுறவில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் ஏற்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், வெள்ளை மாளிகையில் குடியமரப் போகும் மிக வயது குறைவானவர்களாக ஒபாமா, மிச்சேல் தம்பதிகளின் 10 வயதான மாலியா, 7 வயதான சாஷா ஆகியோரே உள்ளனர்.

இவர்கள் சிக்காக்கோவில் இருந்து வாஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையில் பெற்றோருடன் குடியேறவுள்ளனர். இவர்களுடன் ஒபாமாவின் மனைவி மிச்சேலினின் தாய் மார்ட்டின் நெஷ்பிட், மிச்சேலினின் சகோதரர் மார்ட்டின் ரொபின்சன் ஆகியோரும் குடியமரவுள்ளனர். மார்ட்டின் ரொபின்சன் ஒபாமாவின் தேர்தல் குழுவின் காசாளராக இருந்தவர். பிரசாரத்திலும் பங்கேற்றவர். இவரையும் ஒபாமா வெள்ளை மாளிகையில் குடியமரச் சொல்லியுள்ளார்.

பாட்டி மார்ட்டின் நெஷ்பிட், வெள்ளை மாளிகையில் குடியேற விருப்பமில்லை என்றபோதும் பேத்திகள் இருவரும் பிடிவாதம் பிடிக்கவே, குடியமர ஒப்புக்கொண்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

# ஈராக்கிலிருந்து படைகளை வாபஸ்பெற ஒபாமா உறுதி

வாஷிங்டன், நவ. 19

அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பின்பற்றிவரும் வெளியுறவுக் கொள்கையிலிருந்து விலகி தனக்கென தனி முத்திரை கொண்ட கொள்கை ஒன்றை மேற்கொள்வது என்ற தீர்மானத்தில் ஒபாமா உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளை வாபஸ்பெறுவது, ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் காட்டிவரும் அல்-குவைதா தீவிரவாதிகளை நசுக்குவது, போர்க் கைதிகளை அடைத்து சித்திரவதை செய்வதாக அவப்பெயர் எடுத்த குவான்டனாமோ வளைகுடா விசாரணை முகாமை மூடுவது என்பதில் திட்டவட்டமாக உள்ளார் எனவும் கூறப்படுகிறது.

அத்துடன், அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டு செயல்படும் அல்-குவைதா தீவிரவாத அமைப்பின் தலைவன் ஒசாமா பின்லேடனை உயிருடன் பிடிப்பது அல்லது கண்டுபிடித்து அழிப்பது தமது முக்கிய குறிக்கோள் எனவும் -

தீவிரவாதத்தின் அடையாளச் சின்னமாக இருக்கும் பின்லேடனை அழிக்கும் செயலுக்கு முன்னுரிமை அளித்து தமது அரசு செயல்படும்,

அமெரிக்கப் பொருளாதாரம் தற்போது சிக்கலான நிலையை அடைந்துள்ளது. அதை சீர்செய்து நிலைநாட்டுவது அவரது முதற்பணியாக இருக்கும். இதற்காக பட்ஜெட்டில் அதிக அளவு பற்றாக்குறை விழுந்தாலும் அதையும் எதிர்கொள்ள உரிய நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார்கள் எனவும் கூறப்படுகின்றது. இத்தகவலை அமெரிக்காவின் சி.பி.எஸ். தொலைக்காட்சிச் சேவை வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 விடைத்தாள் மதிப்பீட்டை மீள்பரிசீலிக்க பதில் சமர்ப்பிக்க இருவார காலக்கெடு விதிப்பு

## உயர் நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு வழங்கியது

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டில் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கருதும் யாழ். மாணவர்கள், தங்கள் விடைத்தாள்களின் மதிப்பீட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என விண்ணப்பித்தால், அதற்கு பரீட்சைத் திணைக்களம் இணங்குமா என்பதை பரீட்சைத் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து நீதிமன்றத்துக்கு தெரிவிப்பதற்கு மேலும் இருவாரக் கலாக்கெடுவை சட்டமா அதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டில் இடம்பெற்ற குளறுபடி களினால் தங்களின் பிள்ளைகள் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவித்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பத்துமாணவர்களின் சார்பில் அவர்களின் பெற்றோர்கள் மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

நீதியரசர்கள் ஷிராணி பண்டார நாயக்க ஜெகட் பாலபட்டபெண்டி, கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்நிலையில் இந்த மனு நேற்று மீண்டும் எடுத்துக் கொள்ளப் பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பதில் அளிக்க கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை முன்வைத்தார்.

இருவார காலத்துக்குள் பதில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்ட நீதியரசர்கள் வழக்கை அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

மனுதாரர்கள் சார்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் மொழிபெயர்ப்புக்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் படியும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (1)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு இன்று முதல் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.19

தெல்லிப்பழை பிரதேச சமுர்த்தி பயனாளிகளுக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் உணவுப் பொருள்களை இன்று முதல் மூன்று தினங்கள் வழங்கவிருக்கின்றது.

தெல்லிப்பழை, அளவெட்டி, மல்லாகம் ஆகிய ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் இந்தப் பொருள்கள் வழங்கப்படவிருக்கின்றன.

அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்கத்தின் 1,3,10 கிளைகளிலும் -

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் 2,8,39 கிளைகளிலும் - உணவு விநியோகம் இடம்பெறும். (1)

# தமிழ், முஸ்லிம் அதிபர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்காது புறக்கணித்தமை குறித்து அமைச்சிரிடம் முறைப்பாடு

அச்சுவேலி, நவ.19

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II இற்கான நியமனக்கடிதங்கள் கையளிக்கும் உத்தி யோக பூர்வ நிகழ்வில் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் பெருமளவில் புறக்கணிக்கப்பட்டது குறித்து மொழிவழித் தொழிற் சங்கங்கள் கல்வி அமைச்சரிடம் முறையிட்டுள்ளன. தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் நடத்தப்பட்ட விதம் குறித்துக் கண்டனமும் தெரிவித்துள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரியில் நடைபெற்றது. பதவிக்கான நியமனக் கடிதங்களை வைபவத்தில் பெற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் உத்தியோக பூர்வ அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன.

மேற்படி வைபவத்தில் பதவி உயர்வுக் கடிதங்களை பெற்றுக்கொள்வதற்கு வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணம் வடமேல் மாகாணம் உட்பட நாட்டில் பல பகுதியில் இருந்தும் தமிழ், முஸ்லிம் அதிபர்கள் பலரும் சென்றிருந்தனர். ஆனால் அவர்களில் மிகப் பெருபாலானோருக்கு நியமனக் கடிதங்கள் கையளிக்கப்படவில்லை. அதனால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

வைபவத்தில் நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்ளாதவர்களை அலுவலக நேரத்தில் கல்வி அமைச்சில் பெற்றுக் கொள்ளுமாறும் ஏனையோருக்கு கடித மூலம் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. கணனித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக எல்லோருக்கும் உரிய நேரத்தில் நியமனக் கடிதங்கள் வழங்க முடியாமல் போய் விட்டதாகவும் உயர் அதிகாரிகளால் காரணம் கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக தமது அதிதிருப்தியை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சரின் கவனத்துக்குகொண்டு வந்துள்ளன. மிகப் பெரும் எண்ணிக்கையான தமிழர்களும், முஸ்லிம்களும் கடிதங்களை பெற்றுக்கொள்ளாமல் ஏமாற்றத்துடன் திரும்பியமை தொடர்பாக மொழிவழி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கண்டனமும் தெரிவித்துள்ளன. (அ-11)

## மாணவர் கௌரவிப்பு

ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள சமையல் அறைத் திறப்பு விழாவும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 15 மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இன்று முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெறவுள்ளன. (1)

## மேலும் 17 அகதிகள் கிளாலி வந்தனர்

வன்னியிலிருந்து மேலும் 17 பேர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை படகுகளில் கிளாலிக்கரைக்கு வந்துள்ளனர்.

இவர்களைப் படையினர் கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தப் பதினேழு பேரையும் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

பரந்தனின் சில பகுதிகளைச் சேர்ந்த இவர்களை குருநகரில் உள்ள அகதி முகாமில் யாழ். பிரதேச செயலரின் பொறுப்பில் தங்க வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஏற்கனவே சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட 26 பேர் நாவாந்துறை, குருநகர் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (1-207)

# வீட்டிலிருந்து புறப்பட்ட 2 நாள்களின் பின் குடும்பஸ்தர் அலுவலகத்தில் சடலமாக மீட்பு

யாழப்பாணம், நவ. 19

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருந்து புறப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நகரில் உள்ள தாம் பணிபுரிந்த அலுவலகத்தில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கே.கே.எஸ். வீதியில் மனோகராச் சந்திக்கு சமீபமாக உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் கணக்குக் கிளை அலுவலக வாசலில் சடலமாக மீட்கப்பட்டார்.

அந்த நிறுவனத்தின் காவலாளியாக பணியாற்றும் கந்தர்மடம் பழம் வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலாயுதபிள்ளை உதய சூரியன் (வயது 44) என்பவரே நேற்று சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுக் காலை அலுவலகத்திற்கு சென்ற ஊழியர்கள் தூக்கில் இட்ட நிலையில் சடலத்தைக்கண்டு உடன் யாழ். பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினர்.அதைத் தொடர்ந்து யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-86-25)

# பொதுத் தேர்தல் நடத்த சரியான தருணம் இதுதான்

## ஊடகத்துறை அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, நவ. 19

இராணுவ வெற்றிகள் காரணமாக அரசுக்கு மக்களின் ஆதரவு அதிகரித்துள்ள இந்தத் தருணத்தில் தான் பொதுத் தேர்தலொன்று இடம்பெறவேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இப்போது பொதுத் தேர்தலொன்றை நடத்தினால், அதில் வெற்றி பெறுவது குறித்து நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தருணத்தில் தேர்தலை நடத்துவதன் மூலம் அரசின் யுத்த நடவடிக்கைகள குறித்த மக்களின் கருத்தை அறிய முடியும். மேலும் தெளிவான - உறுதியான மக் கள் ஆணையை நாம் பெறமுடியும் - எனவும் அவர் ரொய்ட்டரிற்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பூநகரி கைப்பற்றப்பட்டப் பின்னர் தேர்தல் குறித்த கலந்துரையாடல்கள் அரச மட்டத்தில் அதிகரித்துள்ளதாக ஜனாதிபதியின் நெருங்கிய ஆலோசகர் ஒருவர் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.

பூநகரி வெற்றி ஒட்டுமொத்தமாக அரசுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. அரசுக்கு ஏனைய சவால்கள் அதிகரிக்கின்ற சூழ்நிலையில் இந்தச் சாதகமான சூழ்நிலையை பயன்படுத்த முடியும் என ஆலோசகர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

# தமிழக சலசலப்பை இலங்கை அரசு கிஞ்சித்தும் கணக்கில் எடுக்காதாம்!

## அரசமைப்பு விவகார அமைச்சர் டியு சொல்கிறார்

கொழும்பு, நவ. 19

இலங்கைக்கு எதிராக தமிழ் நாட்டில் நடத்தப்படும் போராட்டங்களை, அங்கு ஏற்பட்டுள்ள சலசலப்புகளை இலங்கை அரசு ஒருபோதும் கவனத்தில் எடுக்காது என்று அரசமைப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகர நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இந்தியாவில் நடத்தப்படவுள்ள பொதுத் தேர்தலுக்காகவே தமிழ்நாட்டில் இந்த நாடகம் நடத்தப்படுகிறது என்றும் இந்தியாவில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இலங்கைப் பிரச்சினையில் தலையிட முடியாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டியூ. குணசேகர தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இந்தியாவுடன் நாம் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளோம். அந்த உறவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

ஆனால், தமிழ் நாட்டில் மாத்திரம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசியல்வாதிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டம் பொய்யானது. இந்தியாவில் பொதுத்தேர்தல் ஒன்று இடம் பெறவுள்ளது. தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகளிடையே அதற்கான போட்டி இப்போது ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை அடிப்படையாக வைத்தே தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் தேர்தலில் குதிக்க வுள்ளனர். (அ-சி)

# இனந்தெரியாத ஆயுதக் குழுவினால் அ'புரம் காட்டில் 4 பேர் தடுத்துவைப்பு

அநுராதபுரம், நவ.19

அநுராதபுரம், ஹொரவப்பத்தானை, சுகத்கம, நகுலவெவக் காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் மண் அகழச் சென்ற இரு சிறுவர்கள் உட்பட நால்வர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் மணல் அகழ்வதற்காக எட்டுப் பேர் காட்டுக்குச் சென்றனர். அவர்களில் நால்வரை ஆயுததாரிகள் தடுத்து வைத்துள்ளனர். ஏனைய நால்வரிடமும் 40 ஆயிரம் ரூபா பணத்தைக் கொடுத்து தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்கிகொண்டு வந்து தரும்படி அவர்கள் பணித்துள்ளனர். அவற்றைக் கொண்டு வந்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இச்சம்பவத்தில் அஸ்ரப் (வயது-15), றிம்ஷான் (வயது-15), ஜெஷலீ (வயது -31) மற்றும் பஸநாயக்க (வயது-38) ஆகியோரே ஆயுததாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயுததாரிகளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு வந்தவர்கள் பொலிஸாரிடம் இது தொடர்பாக நால்வரும் தகவல் கொடுத்துள்ளனர். பொலிஸார் அந்த நால்வரையும் தமது [illegible] (அ-சி)

# இந்தியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கை இராணுவம் 600க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை இதுவரை சுட்டுக் கொன்றுள்ளது. ஆயிரக்கணக்கான மீனவர்கள் அவர்களது துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளனர். மத்திய அரசு இந்த விடயத்தில் அமைதி காத்து வருகிறது. ஆனால், மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து ஆயுதம் வாங்க இலங்கை இராணுவத்துக்கு நிதியுதவி அளிக்கிறது. இதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு இந்தியாவில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

நமது நாட்டிலிருந்து நிதியுதவி பெற்று வாங்கிய ஆயுதங்கள் மூலம் ஈழத் தமிழர்களை, இலங்கை இராணுவம் சுட்டு வீழ்த்தி வருகிறது. இதனால், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் உயிரிழந்துள்ளனர். இதுமட்டுமல்லாமல், பல லட்சக்கணக்கான தமிழர்கள் காயம் அடைந்துள்ளனர். அவர்களது சொத்துகளும் நாசப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிதி உதவியுடன் ஈழத்தமிழர்கள் கொல்லப்படுகின்றார்கள்.

[illegible] சிறுமிகளையும் இலங்கை இராணுவம் பிடித்துச் செல்கிறது. ஆனால் அவர்கள் வீடு திரும்புவதில்லை. இதன் மூலம் இலங்கை இராணுவம் அவர்களைக் கொன்று புதைத்துவிடுகிறது என்பது தெரிகிறது.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகு, இலங்கையில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளுக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், 600க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களைக் கொலைசெய்த இலங்கை இராணுவத்துக்கு, மத்திய அரசு எந்தத் தடையும் விதிக்கவில்லை. இதுவரை மத்திய அரசு கொள்கையளவில் இலங்கை இராணுவத்துக்கு தடை விதிக்க முடிவெடுக்கவில்லை.

ஆகவே, மத்திய அரசு, இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பதற்கும், ஆயுத உதவி செய்வதற்கும் தடை விதிக்க வேண்டும். இலங்கை இராணுவம் தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்வதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் - என்றுள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி ஏ.கே. கங்குலி, நீதிபதி இப்ராகிம் கலிபுல்லா ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கு மீண்டும் வரும் 24ஆம் திகதி (திங்கட்கிழமை) விசாரணைக்கு வருகிறது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வின்றேல் அமைச்சர்கள் வெளிநாடு போகமுடியாது

## ஐ.தே.கவின் லக்ஷ்மன் கிரியெல்ல முன்னெச்சரிக்கை

கொழும்பு, நவ.19

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை உடன் முன்வைக்காவிட்டால் அமைச்சர்களால் இந்தியா மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளுக்குப் போக முடியாத நிலை ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே. கட்சியின் எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்லவே இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சர்வதேச நாடுகளில் இந்தியா எமக்கு மிக முக்கியமான நாடாகும். அதிலும் புது டில்லியை விட தமிழ்நாடு எமக்கு மிகவும் முக்கியம்.

தமிழ் நாட்டுடன்தான் நல்ல உறவை வைத்துகொள்ள வேண்டும் என்று எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

ஆனால், மஹிந்த அரசு அதைச் செய்யவில்லை. இதனால்தான் தமிழ் நாட்டில் இருந்து நெருக்கடி நிலை ஒன்றை இலங்கை அரசு சந்தித்து வருகிறது.

அரசின் அமைச்சர்கள் ஒருவராலும் தற்போது தமிழ் நாட்டுக்குச் செல்ல முடியாது. இலங்கை அமைச்சர்களுள் ஒருவரேனும் தமிழ் நாட்டுக்குச் செல்ல முடியுமா என்று நான் கேள்வி எழுப்புகிறேன்.

தற்போது அரசு கொண்டிருக்கும் அரசியல் தீர்வு நிலைப்பாடு தொடர்பில் இலங்கை அரசு சிக்கல்களை எதிர்நோக்கப்போகிறது.

தொடர்ந்தும் சர்வதேச நாடுகளை ஏமாற்றாமல் உடன் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். தாமதித்தால் ஐரோப்பா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு அமைச்சர்கள் ஒருவரேனும் போக முடியாத நிலை ஏற்படும் - என்றார். (அ-சி)

# ஓமந்தை சோதனை நிலையத்தில் நேற்றும் செஞ்.சங்கம் பணியில் ஈடுபடவில்லை

## பாதுகாப்பு உத்தரவாதம் கிடைக்கவில்லையாம்

கொழும்பு, நவ. 19

ஏ - 9 பாதையில் உள்ள ஓமந்தைப் பகுதியில் உள்ள சோதனை நிலையத்தில் நேற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் பணிக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரச தரப்பினர் ஆகியோரிடமிருந்து தகுந்த பாதுகாப்பு உத்தரவாதம் கிடைக்கப் பெறாததன் காரணமாகவே எமது உறுப்பினர்கள் பணிக்குத் திரும்பவில்லை என கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் அலெக்ஸ்சான் டிரா மட்டி ஜவிக் நேற்றிரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்திருக்கிறார். இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஓமந்தையில் உள்ள சோதனை நிலையம் ஒட்டுசுட்டானுக்கு மாற்றப்படவுள்ளது என்று ஊடகங்களில் வந்திருக்கும் செய்திகளை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ என்னால் முடியாது.

அவ்வாறான விடயங்கள் எல்லாம் நாங்கள் இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய தரப்பினரிடம் நடத்தும் இரகசியப் பேச்சுக்களின்போது விவாதிக்கப்படும். அந்த விவாதங்கள் குறித்த தகவல்களை நான் வெளியிடமுடியாது.

ஆனால், இவ்வாறான சோதனை நிலையம் எங்கு இருப்பது என்பது குறித்து இரு தரப்பினரும் உடன்படவேண்டும். அவ்வாறு இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையம் ஓமந்தை மாத்திரமே.

இந்தியாவினால் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் எதிர்வரும் நாள்களில் எங்களிடம் ஒப்படைக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அது தொடர்பாக இந்தியத் தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை அரச தரப்பினர் ஆகியோருடன் பேசிவருகின்றோம். இந்த உணவுப் பொருள்கள் எவ்வாறு விநியோகிக்கப்படும் என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

வடக்கே மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்த உணவுப்பொருள் விநியோகத்தை செஞ்சிலுவை சர்வதேசக் குழுதானே நேரடியாகச்செய்யும்- என்றார். (அ-சி)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று பத்திரிகைகளை விநியோகித்து விட்டு வவுனியா திரும்பிக் கொண்டிருந்த வான் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த வான் முற்றுமுழுதாக சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவைச் சேர்ந்த தருமேந்திரராசா நகுலேஸ்ரன் (வயது - 12), அவருடைய தந்தையான தருமேந்திரராசா (வயது - 53) மற்றும் கருணாகரன் (வயது - 34) ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் முல்லைத்தீவு வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

கொல்லப்பட்ட சிறுவனின் தாயாரான தருமேந்திரராசா புஸ்பா (வயது - 48) என்பவரும் வான் சாரதியும் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.(அ-சி)

### இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ள ரணில் விக்கிரமசிங்க, இலங்கை நிலைவரம் தொடர்பாக அங்கு பல்வேறு தலைவர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

நேற்றுக்காலை, பா.ஜ.கவைச் சேர்ந்த முன்னாள் வெளியுறவு அமைச்சரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ஜஸ்வந்த் சிங்கைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்கவிடம், விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்குத் தயார் என்று அறிவித்திருந்தாலும், போர் நிறுத்தத்துக்கு வாய்ப்பில்லை என்று கடந்த வாரம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லியில் திட்டவட்டமாக அறிவித்திருப்பது பற்றி கேட்டபோது அவர் கூறியவை வருமாறு:-

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இரண்டு பிரதான கட்சிகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயற்பட வேண்டும். ஏற்கனவே அனைத்துக் கட்சிக் குழுவில் இடம்பெற்றுள்ள முஸ்லிம் கட்சிகளுடன் ஆலோசனை நடத்த வேண்டும்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் உள்ளே கொண்டுவர வேண்டும். அதன் பிறகு, இலங்கையில் அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை, போரினால் இடம்பெயர்ந்த பொதுமக்களைப் பாதுகாப்பது எப்படி என்பதுதான். அவர்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும் - என்றார்.(அ)

வெளிவந்துவிட்டது
அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர்
விலை 210/=
கடைகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை
(சரஸ் புத்தகசாலை)
இல. 14, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

### அரசியல் தீர்வுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தேசியப் பிரச்சினைக்கு பயங்கரவாதத்தை எதிர்ப்பது கூட ஒரு தீர்வுதான். அந்தப் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையைத் திறமையாக மேற்கொள்ளும் நாம் அரசியல் தீர்வு விடயத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம்.

பொருத்தமானதொரு அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு எமக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு மிக முக்கியம்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் இது தொடர்பில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று நான் அழைப்பு விடுக்கின்றேன்.

**தமிழ் நாட்டுடன் நல்லுறவையும் பேணுகின்றோம்**

எமது அரசியல் தீர்வு நிலைப்பாட்டை நாம் சர்வதேச நாடுகளுக்குத் தெளிவாக விளக்கி வருகிறோம். அந்நாடுகள் எமது நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளன.

அத்தோடு நாம் தமிழ்நாட்டுடன் உறவை வைத்துக்கொள்ளவில்லை என்று கூறப்படும் குற்றச்சாட்டை மறுக்கிறேன்.

நாம் நல்லதொரு உறவை தமிழ்நாட்டுடன் பேணி வருகிறோம். அதில் எதிர்க்கட்சிகளுக்குச் சந்தேகமிருந்தால் எம்முடன் தமிழ் நாட்டுக்கு வந்து பார்க்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டை இரண்டாகப் பிரித்து புலிகளுக்குத் தனி நாடு கொடுக்கவே முயற்சியெடுத்தது. அதற்கு ஏற்ப புலிகளிடம் பல பிரதேசங்கள் கொடுக்கப்பட்டன.

நாம் புலிகளுடன் போராடி அந்த நிலங்களையெல்லாம் மீட்டு வருகிறோம். இருப்பினும், அரசியல் தீர்வின் ஊடாகவே நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவே இருக்கின்றோம். - என்றார். (அ-சி)

கற்சுமி வெளியீடு
★ தரம் 3, 4, 5 மாணவர்களுக்குரிய கணிதம் + நுண்ணறிவு வினாத்தாள்கள் (EASY WAY)
★ தரம் 6-11 கணித பாட வினாத் தாள்கள்
பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும்
''உங்கள் பிள்ளையின் கணித அறிவை மேம்படுத்தும்''

### தமிழ்க் கைதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதிகள், சிங்களக் கைதிகளுடன் விடப்பட்டிருக்கின்றனர் எனவும், அவர்களுக்கு அங்கு அடிப்படை வசதிகள் எவையும் சீரான முறையில் இல்லை எனவும் கூறப்பட்டது.

### மன்னாரிப் பகுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணித்தனர். இதனைத் தொடர்ந்து தோட்டவெளி, தாராபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்த ஆலயத்திற்கு சென்றனர். அங்கு வரிசையாக ஆண்களும், பெண்களும் நிறுத்தப்பட்டு அடையாள அட்டைகள் மற்றும் சோதனைகள் இடம்பெற்றன.

இதன்போது பலர் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமான இந்தச் சோதனை நடவடிக்கை 9.30 மணி வரை நடைபெற்றது. இதன் பின்னரே கடற்றொழிலாளர், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் உரிய தொழிலகங்களுக்குச் செல்ல வேண்டியேற்பட்டது. (அ-சி)

### வவுணதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 4 பேரை வவுணதீவு பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை-

கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உறுதியளித்துள்ளார். கைதுசெய்யப்பட்டவர்களிடம் துரித்த விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது எனவும் கூறப்படுகின்றது. (அ-சி)

வெளிவந்து விட்டது
தேர்தல் திணைக்கள முகாமை உதவியாளரை அமைய அடிப்படையில் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி.
(முற்றிலும் எதிர்பார்க்கை)
மாதிரி வினாவிடை
P.கமல்தாசன்
விலை 90/=
அன்னை, பூபாலசிங்கம் புத்தகசாலை

### உடுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் பல வீடுகளும் மற்றும் குடிசைகளும் சேதமடைந்தன.

இந்த ஷெல் தாக்குதலின்போது மக்கள் பதுங்குகுழிகளுக்குள் பதுங்கிக்கொண்டமையால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.(அ-சி)

### அரியநேத்திரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட அரியநேத்திரன் மாலை 3 மணிவரையும் விசாரிக்கப்பட்டார். ஜேர்மனியில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் தாம் ஆற்றிய உரையை மையமாக வைத்து -அந்த உரை தொடர்பாகப் பல்வேறுபட்ட கேள்விகளும் வினாக்களும் கேட்கப்பட்டதாக அரியநேத்திரன் எம்.பி. தெரிவித்தார்.

சமீபத்தில் இதேபோல தமிழ்தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியிடமும் சி.ஐ.டியினர் விசாரணை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(அ-சி)

### கிளாலியிலும், முகமாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்லறி மற்றும் மோட்டார்கள் மூலம் முன்னரங்குகள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். படையினர் பதில் தாக்குதல் நடத்தி பலத்த சேதத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த மோதல்கள் கடந்த 24 மணி நேரமாகத் தொடர்கின்றன.

காயமடைந்த படையினர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் விமான மூலம் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

கூட்டம் கூட்டமாக நிலை எடுத்துள்ள விடுதலைப் புலிகளுடன் படையினர் கடும் மோதலில் ஈடுபட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

### நாயாறு கறுப்புமுனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் உள்ள கறுப்புமுனை நோக்கி சிறிலங்கா கடற்படை கொமாண்டோக்கள் நேற்று நடத்திய தாக்குதல் நடவடிக்கை தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் கடற்படையினரின் படகுகள் சேதமாக் கப்பட்டுள்ளன.

கறுப்புமுனை நோக்கி சிறிலங்கா கடற்படையின் கொமாண்டோக்கள் தமது நவீன அதிவேக ''ஆரோ'' படகுகளிலும் நீரூந்து விசைப்படகுகளிலும் வந்து தாக்குதல் நடவடிக்கையை காலை 6.15 நிமிடத்துக்கு ஆரம்பித்தனர்.

இரண்டு நீரூந்து விசைப்படகுகளும் 12 ''ஆரோ'' படகுகளும் இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டன.

இந்த நடவடிக்கைக்கு ஆதரவாக சிறிலங்கா தரைப்படையினர் எறிகணைத் தாக்குதலை செறிவாக நடத்த, வான் படையின் மிக்-27 ரக வானூர்திகள் மற்றும் உலங்கு வானூர்திகள் ஆகியன இணைந்து தாக்குதலை நடத்தின.

இதற்கு மத்தியில் கடற்புலிகள் தீவிர எதிர்த்தாக்குதலை நடத்தினர்.

கடற்புலிகளின் எதிர்த்தாக்குதலில் சிறிலங்கா கடற்படையின் கொமாண் டோக்கள் இழப்புக்களைச் சந்தித்தனர்.

சுமார் 45நிமிடம் வரை நடைபெற்ற மோதலையடுத்து மூன்று படகுகள் சேதமாகிய நிலையில் சிறிலங்கா கடற்படையினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

கடற்புலிகள் எதுவித இழப்புகளும் இன்றி தளம் திரும்பியுள்ளனர்- என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சமரில் விடுதலைப் புலிகளின் 2 படகுகள் அழிக்கப்பட்டு 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

''விடுதலைப் புலிகளின் ஏழு படகுகள் நாயாறு கடலோரப் பகுதியூடாகப் பயணிப்பதை அவதானித்த கடற்படையின் விசேட படகுப்பிரிவினர் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது புலிகளின் இரு படகுகள் அழிக்கப்பட்டன'' என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கடற்படைக்கு உதவியாக வந்த எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர்கள் புலிகளின் ஏனைய படகுகள் மீது தாக்குதலை மேற்கொண்டன என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இதன்போது விடுதலைப் புலிகளின் 4 படகுகள் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றன எனவும் 6விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org